




ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



# தொண்டன்

ஜூன் - 2019

மலர் - 51 இதழ் - 05



✤ ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்



✤ வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


அன்புடன் உங்களோடு ........ 01
மெட்ஜகோரியே அன்னை ........ 02
துன்பங்கள் எல்லாம் ........ 05
மாறிடுவோமா ........ 07
யார் வருவார் ........ 07
வாய்விட்டுச் சிரித்தால் ........ 08
கத்தோலிக்கத் திருமறை ........ 11
கடுகுக் கதை ........ 12
நாட்டு வைத்தியர் ........ 13
மாணவர் பக்கம் ........ 15
மீண்டும் தழைத்தெழச் ........ 17
சின்ன விசயங்கள் சிறந்த ........ 17
கூண்டுக் கிளிகள் ........ 18
முயற்சி திருவினையாக்கும் ........ 19
இலக்கிய மஞ்சரி ........ 21
கவியரசர் ........ 22
இறைவன் கொடுத்தது ........ 23
எப்படித் தூக்கம் ........ 24
திருஅவைச் செய்திகள் ........ 25
வினாவிடைப் போட்டி ........ 26
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28



✱ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்) ✱



SOCIAL COMMUNICATIONS CENTRE
**P.O. BOX - 44**
**BATTICALOA.**
**TEL : 065 2226486**
**E-MAIL : battiscc@gmail.com**



விலை: : 50/=

ஆண்டுச் சந்தா :950/=
(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு ...

## எதற்காக இந்த வாழ்க்கை ...

**தொ**ட்டுக் கெட்டுப் போனவன் இந்திரன் என்பார்கள். தொடாமல் கெட்டுப் போனவன் இராவணன் என்பார்கள். சொல்லிக் கெட்டவன் விசுவாமித்திரர் என்பார்கள். சொல்லாமல் கெட்டுப்போனவன் அரிச் சந்திரன் என்பார்கள். கொடுத்து கொடுத்து கெட்டவன் கர்ணன் என்பார்கள். கொடாமல் கெட்டவன் துரியோதனன் என்பார்கள்.


இப்படி அவன் கெட்டவன், இவன் கெட்டவன், அவன் குடும்பம் அப்படிப்பட்டது, இவன் குடும்பம் இப்படிப்பட்டது என்று மற்றவரை புறந்தள்ளி, மற்றவர்களைப் பற்றி இல்லாதது பொல்லாதது பேசி வாழ்வை அழித்தவர்கள் அதிகமானவர்கள். எம்மில் பலர் இப்படித் தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்....

வாழும் வாழ்க்கையில் உண்மை இல்லை, நேர்மை இல்லை, மனதில் பல திட்டங்கள், மக்களை ஏமாற்றுகிற மனப்பான்மை, உயிர்களை அழிக்கின்ற மிருகத்தனம். இறப்பைப் பார்த்துக்கூட இரக்கம் காட்டாத கல் நெஞ்சம் படைத்த மனிதர்களோடு எப்படி வாழ்வது என்பதை நினைக்கிறபோது வேதனையோடு கூடிய அச்சம் எம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்கிறது. எதற்காக இப்படியெல்லாம் வாழ்ந்து சுயநலத்தோடு இலாபம் தேடுகிறார்கள். எதற்காக இந்தப் போலித்தனமான வாழ்க்கை? இதனால் உனக்கு என்ன கிடைக்கப் போகிறது?

மனிதன் நினைப்பதுண்டு இவ்வாழ்வு நிலைக்கும் என்று, கடவுள்
நினைப்பதுண்டு மனிதன் பாவம் என்று.

பிடித்த வாழ்க்கையை வாழ்வோம்
யாரையும் காயப்படுத்தாமல் .........
கடவுள் உன்னை காத்துடுவார்.

– ஆசிரியர் –




"நீ அச்சமின்றி உன் வழியில் நடப்பாய்;
உன் கால் ஒருபோதும் இடறாது" நீதிமொழி 3:23



# மெட்ஜகோரியே அன்னையிடமிருந்து அழைப்பு

- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

இலங்கையில் 21.4.2019 இயேசுவின் உயிர்ப்பு விழா அன்று இடம்பெற்ற கொடூரமான குண்டு வெடிப்பில் வேத சாட்சிகளாக மரித்த 300ற்கும் மேற்பட்ட இறைமக்களின் ஒரு மாத நிறைவு தினமன்று (21.05.2019) அடியேனுக்கு அன்னையிடமிருந்து ஓர் அரிய அழகிய அழைப்பு கிடைத்தது. அவரது திருத்தலத்தில் அதே தினத்தில் கொல்லப்பட்ட அனைத்து மக்களுக்காகவும், குற்றுயிராய் மருத்துவ மனைகளிலும், தனியார் இல்லங்களிலும் துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் 500ற்கும் மேற்பட்ட மக்களுக்காவும் விசேட திருப் பலியினை இத்தாலி மொழியில் ஒப்புக்கொடுத்து அன்னைமரியின் தொடர்சியான பரிந்துரையும் கிடைக்க வேண்டி மன்றாடினேன்.

நான் கனவுகூடக் காணவில்லை இத்தகைய புனித பூமிக்கு அன்னை என்னை அழைப்பார் என்று. திருத்தலத்தைத் தரிசித்த பின்புதான் இங்கு அனுதினமும் இடம்பெறும் புதுமைகளை உய்த்துணர முடிந்தது. குறோஆசியா நாட் டில் உள்ள மெட்ஜகோரியே என்ற சிறிய கத்தோலிக்கக் கிராமத்தில் 1981ம் ஆண்டு தொடக்கம் கடந்த 38 ஆண்டுகளாக அன்னை ஆறு தனிப்பட்ட நபர்களுக்கு தனிப்பட்ட விதத்தில் காட்சியளித்து மனமாற்றத்துக்கும், ஒப்புரவுக்கும் அழைப்பு விடுத்து வருகின்றார். அன்று தொடக்கம் இன்றுவரை நாடுகளிடையே, மக்களிடையே கிளர்ந்தெழும் இன ரீதியான, மத ரீதியான, மொழி ரீதியான பகைமையை, வகுப்புவாதங்களை, வன்முறைகளைக் களைந்தெறிந்து விட்டு மீட்பளிக்கும் கிறிஸ்துவின் வல்லமையை ஏற்று ஒப்புரவு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கிறிஸ்துவின் விழுமியங்களை வாழ் வாக்க அனைவரும் செபிக்க வேண்டும்: ஒத்துழைக்க வேண்டும் என அன்னை அழைப்பு விடுக்கின்றார். இறைவனின் வியத்தகு செயல் களை வெறும் வார்த்தையினால் வெளிப் படுத்த முடியாது. நேரில் வந்து அனுபவிக் கும் போதுதான் நிறைவைக் காணும். ஒவ்வொ

ருவரும் தனிப்பட்ட விதத்தில் கடவுள் எவ்வளவுக்கு என்னை அன்பு செய்கிறார், எவ்வளவுக்கு என்மேல் அக்கறை கொண்டுள்ளார் என்பதனை அனுபவிக்கும் போதுதான், அருளின் ஊற்றிலிருந்து பருகமுடியும்.

1980ம் ஆண்டில் கடந்த நூற்றாண்டு முடிவதற்கு முன்னர் அன்னை மரியாள் மெட்ஜகோரியே வாழ் மக்களுக்கு காட்சியளித்து மனந்திரும்புமாறும், செபித்து நோன்பிருக்கும் படியும் அழைப்பு விடுத்தார். அதன்மூலம் அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த விடுதலையும், அவர்கள் அறியாத அவர்களைச் சூழ இருந்த யுத்தத்திலிருந்த பயமும் விரட்டியடிக்கப்படும் என காட்சிகளின் மூலம் வெளிப்படுத்தினார். "அன்பார்ந்த பிள்ளைகளே, உங்கள் பங்கை ஒரு விசேட காரணத்திற்காக தேர்ந்தெடுத்திருக்கிறேன்" என்ற வார்த்தைகளும் அம்மக்களின் உள்ளங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. உலகெங்குமிருந்து ஆயிரக் கணக்கான அன்னையின் பக்தர்கள் தங்கள் சிறிய கிராமத்தைத் தேடி அனுதினமும் வருவார்கள் என அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. கோடிக் கணக்கான யாத்திரிகர்கள் ஆண்டுதோறும் அன்னையின் பாதத்தை அண்டி வந்து நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் மெட்ஜகோரியில் தாங்கள் கண்ட, அனுபவித்த கடவுளுக்கு சான்று பகர்வார்கள் என ஒருபோதும் அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்கள் உள்ளத்தில் நிறைந்த வார்த்தைகளாக அமைதியின் வல்லமையை, அவர்கள் உள்ளத்தில் பெற்ற மனமாற்றத்திற்கான உறுதியினால் பெற்ற அமைதியை உலகம் எங்கும் அமைதியைக் கொடுக்கும் என நம்புகிறார்கள்.

மரியன்னை காட்சி கொடுத்த சிறுவர் சிறுமியர் அறுவர்தான். அவர்கள் இவான், மரிஜா, இவாங்கா, மிர்ஜானா, ஜாக்கோவ், விக்கா. இவர்கள் அனைவரும் இன்னும் உயிரோடு இருக்கின்றனர். இவர்கள் சாட்சியம் அளிக்கையில் ஒன்றாகக் கூறுவது, "யூன் மாதம் 24ம் திகதி 1981ம் ஆண்டு முதன் முதல் காட்சியளித்த மரியன்னை இன்று வரை காட்சியளித்து வருகின்றார் (1981-2019)". அதே தினம் ஆறு சிறுவரும், சிறுமியரும் மலையில் ஏறக்குறைய மாலை 6 மணியளவில் நம்பமுடியாத அழகிய இளம் பெண்ணைக் கையில் ஒரு குழந்தையுடன் கண்டார்கள். மரியன்னை அவர்களைத் தன் அருகே வரும் படி அழைத்தபோது முதலில் பயந்தார்கள்: ஆச்சரியமடைந்தார்கள். மரியன்னைதான் என அறிந்தும் அருகே நெருங்கிச் செல்லவில்லை. மறுநாளும் அன்னையைக் காண அறுவரும் மலைக்குச் சென்றபோது அன்னையை நெருங்கிச் சென்று, அவர் பாதத்தில் விழுந்து செபிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் அன்னையிடம் அவரைக் கண்டதற்கு மக்களிடம் சொல்ல அடையாளங்களைக் கேட்டபோது "பிள்ளைகளே, இறைவன் உங்களோடு இருப்பாராக" என மொழிந்தார். மறுபடியும் தரிசனம் கொடுப்பாரா எனக் கேட்டபோது, தலையை ஆட்டிவிட்டுச் சென்றதாகக் கூறினார்கள். அன்னையே, நீங்கள் எம்மிடம் எதிர்பார்ப்பது என்ன எனக் கேட்டபோது, "மக்கள் எல்லாம் உறுதியாக நம்பிக்கை வைத்து செபிக்க வேண்டும்" என அன்னை பதிலளித்தார். ஒரு நாள் அவர்கள் அன்னையிடம், "நீங்கள் எதற்காக எங்கள் பங்கு கோயிலில் வந்து காட்சி கொடுப்பதில்லை" எனக் கேட்டதற்கு அன்னை "காணாமல் விசுவசிப்போர் பேறு பெற்றோர்" எனப் பதிலளித்தார்.

இவ்வாறாக, மக்கள் தொகை இந்த புதுமையைக் காண அதிசயத்தைக் கேட்டு வந்ததால் தினமும் அதிகரிக்கத் தொடங்கியது. சில நாட்கள் அன்னை ஆலயத்திலும் காட்சி கொடுக்கத் தொடங்கினார். பங்குத் தந்தையும் மக்களை அவ்வேளைகளில் செபமாலை சொல்லவும், நற்கருணை விருந்தில் பங்கு பற்றவும் ஊக்குவிக்கத் தொடங்கினார். அவரும் ஒரு நாள் செபமாலை செபிக்கையில் அன்னையைக் காட்சியில் கண்டார். இத்தனை நாட்களும் நம்பிக்கையற்றிருந்த அவரும் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினார். பல தினங்கள் தொடர்ந்து ஆலயத்திலேயே காட்சிகள் இடம் பெற்றன. ஆனால், தீய சக்திகள் முனைப்போடு ஈடுபட்டு மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தின.

அதனைத் தொடர்ந்து காட்சிகள் ஆலயத்தில் இடம்பெறவில்லை. காட்சி கண்ட பிள்ளைகள்

தனிமையான வேறொரு வீட்டில் ஒன்றாகக் கூடி மீண்டும் அன்னையைக் காட்சியில் கண்டு அவருடன் பேசவும், அவரின் செய்தியைக் கேட்கவும் தொடங்கினார்கள். சில வேளைகளில் காட்சிகள் 2 நிமிடங்களில் முடிந்தன. சில வேளைகளில் ஒரு மணி நேரம்வரை நீடித்தன. சில சமயங்களில் காட்சியாளர்களில் ஒரு சிலருக்கு மட்டுமே காட்சியளித்தார். சில சமயங்களில் ஆறு பேருக்கு மட்டுமல்ல மற்றும் பலருக்கும் காட்சியளித்தார்.

இவ்வாறாக இன்றுவரை காட்சிகள் தொடர்கின்றன. யாத்திரிகர்களின் தொகையும் தினமும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. திருச்சபையும் காட்சிகளை முழுமையாக அங்கீகரிக்காவிட்டாலும், மெட்ஜகோரியே என்ற இந்த இடத்தை ஒரு திருத்தலமாக ஏற்றுக்கொண்டு பிரகடனப்படுத்தியுள்ளது. இவற்றுக்கு எதிரான தீய சக்திகளும் மும்முரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தினமும் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புதுமைகள் இடம் பெறுகின்றன. எல்லாவற்றையும் விட பெரிய புதுமை, இங்கு இடம்பெறும் மனமாற்றமாகும். இங்கு வருபவர்கள் அனைவரும் மனம்திரும்பி, நல்ல பாவ அறிக்கை செய்து புதியவர்களாக வீடு செல்ல, ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்குபற்ற வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இங்கு காட்சியளித்த மரியாளின் செய்தியைச் சுருக்கமாகக் கூறினால் இவ்வாறுதான் அமையும்.

"அன்பார்ந்த பிள்ளைகளே
உங்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட மனமாற்றத்துக்கும்
உங்களை அழைக்கிறேன்.
இந்த நேரம் உங்களுக்கானது, உங்களுடையது
நீங்கள் இல்லாமல் கடவுளின் திட்டம் நிறைவேற முடியாது.
அன்பார்ந்த பிள்ளைகளே,
நாளுக்கு நாள் செபத்தின் மூலம்
கடவுளுக்கு அண்மையில் வாருங்கள்.
உங்களுடைய கோலியாத்துக்கு எதிரான
கருவியை உங்களிடம் தருகிறேன்.
இவையே உங்களுடைய சிறிய கற்கள்.

1. இதயத்திலிருந்து செபித்தல் - செபமாலை
2. நற்கருணை
3. திருவிவிலியம்
4. நோன்பிருத்தல்
5. மாதமொருமுறை நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தல்.

**யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.**


## முதல் திருப்பலி



அர்ஜென்டீனா நாட்டில் முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டதன் 500ம் ஆண்டு நிறைவையொட்டி, அந்நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் திருநற்கருணை ஆண்டிற்கென மக்கள் தங்களையே தயாரிக்கவேண்டும் என்ற விண்ணப்பத்துடன், திருத்தந்தை ஒரு குறுகிய காணொளிச் செய்தியை அனுப்பினார்.

500 ஆண்டுகளுக்கு முன் விதைக்கப்பட்ட அந்த விசுவாச விதையின் வழித்தோன்றல்களான அர்ஜென்டீனா மக்கள், திருநற்கருணையைத் தங்கள் வாழ்வாக மாற்ற இந்தச் சிறப்பு ஆண்டில் முயலவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். வசதிகளும், வாய்ப்புகளும் இன்றி தவிக்கும் மக்களைத் தேடிச் சென்று உதவுதலை முதல் பரிந்துரையாக வழங்கியுள்ளார்.

மேலும், அடக்கச் சடங்கை நினைவுறுத்தும் சோகமான இதயத்தைக் கொண்டிராமல், இறைவனில் முழு நம்பிக்கை கொண்ட, உயிர் துடிப்புள்ள மகிழ்வான இதயத்தை கொண்டிருக்க வேண்டும் என்று அர்ஜென்டீனா மக்களுக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் காணொளிச் செய்தி வழியே அழைப்பு விடுத்துள்ளார்.



# துன்பங்கள் எல்லாம் தூசிகளே!



- ஜெ.எச்.இராஜேந்திரராஜா

"**வே**லை கிடைக்கவில்லை... சாகலாம் போல உள்ளது" நல்ல கல்லூரியில் நல்ல மதிப்பெண்க ளுடன் தேறிய ஒரு பொறியியலாளர் கூறிய வார்த்தை.

**பணியிட மனநலம் :**

வேலையில்லாத நிலை, வேலையில் பளு, வேலையில் மன அழுத்தம், இவ்வாறான பல காரணங்களுக்காகத் தற்கொலைகள் பெருகி வருகின்றன. இது கவலை தரும் விடயம். எமது நாட்டில் சாலை விபத்துகள், மதுபானசாலைகள், நுண்கடன் தற்கொலைகள், மாரடைப்பு போல இதுவும் அவசியம் விழிப்புணர்வு அளிக்கப்பட வேண்டிய விடயம். இதன் சமூக உளவியல், மருத்துவத் தீர்வுகள் எல்லோருக்கும் தெரிய வேண்டியவை. மேலை நாடுகளில் பணியிட மனநலம் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இங்கும் அதன் தேவை வளர்ந்து வருகின்றது.

**துக்கம் எனும் நோய்**

சுய மதிப்பு இழத்தல், உதவி இல்லாமை மற்றும் நம்பிக்கையின்மை என மூன்று முக்கிய உளவியல் காரணங்களைத் துக்க நோய்க்கான காரணமான மனநிலைகள் என்கிறார்கள். ஆமாம், துக்கம் என்பதும் ஒரு நோய்தான். இதில் நம்பிக்கையின்மைதான் கடைசியில் தவறான முடிவை எடுக்க வைக்கிறது. நம்பிக் கையை வளர்க்கும் செய்திகளை. சிந்தனைகளைத் தேர்வுசெய்து உட்கொள்வது மிக அவசியம். நம்பிக்கை யைக் கெடுக்கும் செய்திகளை நச்சு போலத் தவிர்ப்பது நல்லது. இதை ஒரு திறனாகச் செய்ய நம் குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். கவிஞர் வாலி திரைப்படத்துறைக்கு வருவதற்கு மிகவும் போராடிக்கொண்டிருந்த நேரம். ஒரு முறை சலித்துப்போய் ஊருக்குத் திரும்பலாம் என்று நினைக்கையில் அவர் கண்ணதாசனின் ஒரு திரைப்படப் பாடலைக் கேட்கிறார். அது அவர் மனதை உறுதி செய்து மீண்டும் போராடித் திரைப்பட வாய்ப்புக்கு நெருக்கமாக அழைத்துச் செல்கிறது. அந்தப் பாடல் 'மயக்கமா...கலக்கமா' என்று தொடங்கும். அதிலுள்ள பிரிய வரிகள் 'உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு' அமரத்துவம் பெற்ற இந்த வரிகள், துன்பம் வரும் தருணங்களில் ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்கவேண்டிய வரிகள்.

**மாறும் நிஜங்கள்**

வேலை கிடைக்கவில்லை, வருமானம் இல்லை, வேலை போய் விட்டது, குடும்பம் கஷ்டத்தில், வேலையில் தீராத மன உளைச்சல், ஆரோக்கியம் கெடுகிறது. எல்லாம் நிஜமான போராட்டங்களே. எதையும் மறுப்பதற் கில்லை. ஆனால், மறந்து



விட்ட ஒரே உண்மை. இவை அனைத்தும் மாறக்கூடிய நிஜங்கள். இவற்றை மாற்றத் தேவை மனோதிடம்.

**மாறாத நிஜங்கள்**

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் மாற்ற முடியாத நிஜங்களுடன் எத்தனை பேர் போராடிக் கொண்டிருக்கிறார்கள்?

மனவளர்ச்சி குன்றியவர்கள், சிறு வயதில் பெற்றோர்களை இழந்தவர்கள், போர்க் குற்றங் களால் பாதிக்கப்பட்டோர், இயற்கைப் பேரிடரில் அனைத்து உடைமைகளையும் இழந்தவர்கள், பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுமி கள், விபத்தில் உறுப்பிழந்தவர்கள், சாதிக் கொடுமையால் அடிப்படை உரிமைகள் மறுக்கப் பட்டோர், வேற்று நாட்டுச் சிறைகளிலும், நமது நாட்டுச் சிறைகளிலும் நீதி கிடைக்காமல் வருடக் கணக்கில் சிக்கியுள்ளோர், மனநலம் பாதிக்கப்பட்டுத் தெருவில் விடப்பட்டவர்கள். இன்னமும் நிறையப்பேரைப் பட்டியலிடலாம்.

**பூதக்கண்ணாடியில்...**

இவர்கள் வலிகளைவிட நம் வலி பெரிதா? எந்த நம்பிக்கையில் இவர்கள் வாழ்கிறார்களோ, அதே நம்பிக்கை நம்மைக் காக்காதா?

யோசித்துப் பார்த்தால் நம்மில் பலர் சமூகத்தின் 98 சதவீத மக்களைவிட சிறப்பாக இருக்கிறோம். இந்த உண்மையை பெரும்பாலான நேரத்தில் நாம் நினைப்பதில்லை. நம்மிடம் இல்லாததை நினைத்து வேதனை கொள்ளும் நாம் மற்றவர் களை விடச் சிறப்பாக இருக்கிறோம் என்கிற உண்மையைப் புறந்தள்ளிவிடுகிறது.

இப்படிச் சலித்து எடுத்துப் பிரச்சினைகளைப் பூதக்கண்ணாடியில் வைத்துப் பார்க்கையில் நாம் மலைத்து விடுகிறோம்.

**நல்லதே நடக்கும்**

போதாக்குறைக்கு நாம் பேசும் மொழி நம் எண்ணங்களைக் கூர்மைப்படுத்துகிறது.

"இந்த வேலை மாதிரி கஷ்டமான வேலை உலகத்திலேயே கிடையாது."

"என் அளவுக்கு அடிபட்டவன் யாரும் இருக்க மாட்டான்."

"என் நிலைமை எதிரிக்குக்கூட வரக்கூடாது."

"அது மாதிரி ஒரு சோதனையை என் வாழ்க்கையிலேயே நான் பார்த்ததில்லை."

"இந்த மாதிரி ஒரு மோசமான முதலாளி உலகத்திலேயே கிடையாது"

இப்படிப் பேசப்படும் சொற்களை ஆழ்மனம் பதிவு செய்து கொள்கிறது. பின்னர் இவை மெல்ல நம் சுய மதிப்பைக் குறைக்கின்றன. பின் அடுத்தவர் மதிப்பையும் குறைத்துத் தன்னை யாராலும் காப்பாற்ற முடியாது என்று நம்ப வைக்கிறது. எதிர்காலம் சூனியமாகத் தெரியும். பின் தன்னம்பிக்கை மறையும். வாழ்க்கை பற்றிய நம்பிக்கை மறையும்.

அதனால் படித்துவிட்டு வேலை தேடுவோர், வேலை தாவி வேறு வேலை தேடுவோர், வேலைச் சூழ்நிலையில் சிக்கலில் உள்ளவர்கள் என அனைவரும் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான்.

"நல்லது நிச்சயம் நடக்கும் என நம்புவது". அந்த நம்பிக்கையைத் தரக்கூடிய தெய்வங் கள், மனிதர்கள், புத்தகங்கள், பாடல்கள், வழிமுறைகள், அமைப்புகள், வார்த்தைகள், நடத்தைகள் என அனைத்தையும் தழுவிக் கொள்ளுங்கள்.

**சிறு தூசி**

ஒரு சோதனைக்காலத்தில் ஒருவர் தலைப்பு பார்த்து வாங்கிய "Tough times never last Touch people do" என்னும் புத்தகம் அவரது வலிமையை உணர்த்தியதாம். அதில் சில வரிகள்.

***"ஆண்டவன் இந்த சோதனையை உங்களுக்கு அளித்திருக்கிறான் என்றால் அதை வென்று வெற்றி கொள்ளும் திறமை உங்களுக்கு உள்ளது என்கிற காரணத்தினால்தான்"***

***"கண்ணில் விழும் தூசி கண் பார்வையையே மறைக்கும். அதைத் துடைத்துப் போடுகையில் தான் தெரியும் அது கண் பார்வைக்குக்கூட அகப்படாத சின்னஞ்சிறிய தூசி என்று"***

**எதை இழந்தாலும் இழக்கக்கூடாதது நம்பிக்கை.** ■



# மாறிடுவோமா?

ஜெயந்தி யோகதாசன்

இறைவன் தந்த இந்த வாழ்க்கை
ஒரு வரம்!
அதில் நாம் வாழ்வது
ஒரு தரம்!
இவ்வாழ்வில்
ஏக்கம், ஏற்றம் வரும்வரை
ஏழ்மை தீரும் வரை
ஏற்றம் வந்தபின்
எதையும் ஏளனமாய் பார்ப்பதால்
ஆணவமும், அதிகாரமும் வளர்ந்து
ஆண்டவரையும் மறந்து - பின்
தூக்கம் தொலைந்து
இரவுகளில் துவண்டு விடும் நிலை கண்டு
சோகம் கொள்ளும் மனமே
நீ சில நிமிடம் நில்! நிதானி!

திருவிவிலியத்துடன் தினசரி உன் வாழ்வின்
சில மணித்துளிகளை செலவழி
தீர்வு உடன் கிடைத்திடும்!
இறுமாப்பு வரும் முன்னே இகழ்ச்சி வரும் பின்னே
தன்னடக்கம் இருக்குமாயின் ஞானமும் இருக்கும்
என்கிறது திருவிவிலியம் தெளிந்துகொள்!
தினமும் திருவிவிலியத்தின் ஒரு பகுதி வாழ்வின்
தெரிவாக வேண்டும் நலமது பெறுவீர்
நீயும் உனைச் சார்ந்தவர்களும் நாளும்
இறைவார்த்தையைப் புரிந்து, உணர்ந்து
அதைப் பறைசாற்றி, பகிர்ந்து வாழும்
பணியை செய்யும் இறைமக்களாய் மாறிடுவீர்!

# யார் வருவார்...?

■ வட்டக்கச்சி
எஸ்.பி.வக்குனா.

விடை பெற்ற
உயிர்களுக்கு
விடை என்ன...?


உடல்
உடை பட்டு
ஊனமானவர்களுக்கு
விடை என்ன...?

தாய் தந்தையரை
இழந்து தவிக்கும்
குழந்தைகளுக்கு
விடை என்ன...?

பெத்த
பிள்ளைகளை
பறி கொடுத்த
பெற்றவர்களுக்கு
விடை என்ன...?

இருக்கா .....
இல்லையா.....
காணாமல் போனவரின்
உறவுகளுக்கு
விடை என்ன...?

விடை சொல்ல
யார் வருவார்...???
விடியல் ஒன்று
யார் தருவார்...???



# வாய்விட்டுச் சிரித்தால்
## நோய் விட்டுப்போகும்



அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



அண்மையில் திருப்பலி ஒன்றினை நிறைவேற்றிவிட்டு வெளியே வருகின்ற போது ஒருவர் என்னிடத்தில் "பாதரை எப்போது பார்க்கின்றபோதும் சிரித்த முகத்துடனே வருகின்றார். சந்தோசமாக இருக்கிறது. அவ்வாறு நாங்கள் அடுத்தவரைப் பார்த்து புன்னகைக்க முயல்கின்றபோது, இவருக்கு எப்போதும் இழிப்புத்தான் என்று குறைபட்டுக் கொள்கின்றார்கள்" என்று ஆதங்கத்துடன் சொன்னார்.

இன்று பலருடைய ஏக்கம் 'மனசார சிரிச்சு எத்தன நாளாகிப் போச்சு' என்பதேயாகும். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் 'சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்கே சொந்தமான கையிருப்பு, வேறு ஜீவராசிகள் செய்ய முடியாத செயலாகும் இந்தச் சிரிப்பு' என்று சிரிப்பினைக் குறித்து அழகாகப் பாடியுள்ளார். சிரிப்பு, புன்னகை இலவசமாக மனிதர் அடுத்தவருக்கு கொடுக்கக்கூடிய கொடையாகும். கவிப்பேரரசர் வைரமுத்து அவர்கள் 'எந்த உதடும் பேசத்தெரிந்த சர்வதேச மொழி சிரிப்பு' என்றும், 'சிரிக்க உதடுகளைத் திறக்கும்போதெல்லாம் துக்கம் வெளியேறி விடுகிறது' என்றும் சிரிப்பினைக் குறித்து குறிப்பிடுவதனை நோக்கலாம்.

வருடந்தோறும் வைகாசி மாதத்தின் முதலாம் ஞாயிறு தினத்தை உலக சிரிப்புத் தினமாக (World Laughter Day) கொண்டாடுகின்றார்கள். இத்தினத்தை இந்தியாவின் மும்பை மாநகரினைச் சேர்ந்த வைத்தியர் மதன் கதாரியா அவர்கள் 1998ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைத்தார். இன்று உலகம் முழுவதும் நினைவு கூரப்படும் நாளாக மாறிவிட்டது. சிரிப்புக் கலை (Laughter Therapy) இன்று நோய்களை விரட்டும் சக்தியாக மாறிவிட்டது. நான் சென்னையில் கற்கின்றபோது காலையில் மெரினா கடற்கரையில் நடைபயிற்சிக்கு செல்வேன். அங்கு தினமும் ஒரு கூட்டம் கூடி நின்று சிரிப்புக்கலை பயிற்சியில் ஈடுபடுவார்கள். முதலில் பார்த்தபோது சுத்த பைத்தி

தியக்காரத்தனமாகத் தோன்றியது. வரும் நாட்களில் தான் அதன் முக்கியத்துவத்தை கண்டு கொண்டேன். தமிழில் நாம் அழகுற கூறுமாற்போல் 'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும்' என்பது எவ்வளவு அர்த்தம் பொதிந்த வார்த்தைகள். ஒவ்வொரு தடவையும் சிரிக்கின்றபோது உடலின் 300 வகையான தசைகள் அசைவுறுகின்றன. அதனால் உடலுக்கு ஆரோக்கியமும், புத்துணர்ச்சியும் கிடைக்கின்றன என்பது மருத்துவத் தகவல். அதனாற்தான் என்னவோ உலகநாயகன் கமல்ஹாசனின் நடிப்பில் உருவான 'வசூல் ராஜா MBBS'ன் கட்டிப்பிடி வைத்தியம் அனைவரையும் கட்டிப்போட்டதோ என்னவோ, யாமறியோம். சராசரியாக நாளொன்றுக்கு குழந்தைகள் 300 – 400 தடவைகள் சிரிக்கின்றார்கள். ஆனால் குடும்பத் தலைவர், தலைவிகள் வெறும் 15 தடவைகளே சிரிக்கின்றார்களென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மனிதர் வளர வளர சிரிப்பு அவர்களில் குறைவடைகின்றது.

நகைச்சுவையான மனிதர்கள் கூடுமிடத்தில் கலகலப்புக்கு என்றும் குறைவு இருக்காது. நகைச்சுவை, மனிதர்களை அவர்களது சுமை களை, வலிகளை மறந்து சிறிதுநேரம் மகிழ்ந்தி ருக்க செய்கின்றது. அதனாற்தான் உலகின் தலைசிறந்த நகைச்சுவை கலைஞர்கள் எல்லோ ரும் காலம் கடந்தும் நினைவு கூரப்படுகின் றார்கள். நான் சிறுவனாக இருந்த காலத்தில் தொலைக்காட்சியில் விரும்பிப்பார்த்த இரு நிகழ்ச்சிகள் Mr. Bean அடுத்து சார்லி சப்ளின் ஆகியோரது நகைச்சுவையாகும். இன்றும் இவர்கள் மீண்டும், மீண்டும் மக்களால் இரசிக்கப்படுகின்றார்கள். அந்த வரிசையில் தமிழ் சினிமாவில் கலைவாணர், பாலையா, நாகேஷ், மனோரமா, செந்தில், கவுண்டமணி, வடிவேல், கோவை சரளா, விவேக், சூரி, சந்தானம் இன்னும் பலரென பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. தங்களது ஹாசியத்தால் மக்கள் மனதைக் கொள்ளை கொண்டவர்கள் இவர்கள். நகைச்சுவை கலைஞர் வடிவேல் அவர்களின் 'மாப்பு வச்சிடான்ய்யா ஆப்பு' என்கின்ற வார்த்தைகள், அவரது உடல் அசைவுகள் போன்றவற்றை பார்த்துப் பார்த்து




இன்புறுகின்ற குழந்தைகள், வளர்ந்தவர்கள் எத்தனையாயிரம் பேர். அந்தளவிற்கு இக் கலைஞர்களின் நகைச்சுவையும், ஹாசியமும், குறும்பும், நகைச்சுவையுடன் கலந்த சிந்தனையும் அனைவரையும் கொள்ளையடித்து விடுகின்றன.

நகைச்சுவை என்பது அனைவருக்கும் வாய்த்ததொன்றல்ல. அது சிலருக்கென வாய்த்த சிறப்புக்கலை. மனிதருட் சிலர் இயல் பாகவே ஹாசியமாகப் பேசுவார்கள். அவர்க ளோடு இருக்கின்றபோது நேரம் நகர்வதே தெரியாது. அந்தளவிற்கு தமது நகைச்சுவையால் அனைவரையும் சிரித்து இன்புறச் செய்வார்கள். மக்கள் மத்தியில் சிரிப்பினை, புன்னகையை தோற்றுவிப்பதில் நகைச்சுவைப் பாரிய பங்கினை ஆற்றுகின்றது.

வகுப்பறையில் தமிழ் ஆசான் வருகின்ற போதெல்லாம் ஒரு மாணவன் சிரித்துக்கொண்டே இருந்தான். ஆசான் நெடு நாட்களாக இதனை அவதானித்துக் கொண்டே வந்தார். ஒரு நாள் அம்மாணவனிடம் 'நீ ஏன் நான் வகுப்பறையினுள் நுழைகின்ற போதெல்லாம் சிரிக்கின்றாய்' என்று கேட்டார். அவனும் பதிலுக்கு 'நீங்கள் தானே சொல்லிக் கொடுத்தீர்கள் துன்பம் வரும்கால் நகுக' என்று. தன் துன்பம் எல்லாம் தமிழ் ஆசான்தான் என்பதனைத் தன் நகைச்சுவை ததும்பும் சொற்களால் சொல்லாமல் சொல்லி விட்டான். இன்னுமொரு சம்பவத்துடன்கூடிய நகைச்சுவையினைப் பார்க்கும்போது,

பத்திரிகையாளர் ஒருவர் மகாத்மா காந்தி அவர்களைச் சந்தித்தபோது 'உங்கள் நாட்டு மக்கள் போயும் போயும் உங்களைத் தங்கள் தலைவராகத் தேர்ந்து கொண்டார்களே, வேறு ஆள் கிடைக்கவில்லையா?' என கிண்டலாகக் கேட்டார். அதற்கு காந்தி அவர்கள் அடக்கமாக ஆனால் நகைச்சுவை ததும்ப 'உங்களைப் போன்ற பிரிட்டிஷ்காரர்களைச் சமாளிக்க நான் மட்டும் போதுமென அவர்கள் எண்ணியிருப்பார்கள் போல' என்று பதிலளித்தார். ஆம், இவ்வாறு பல நகைச்சுவைகள் நம்மைச் சிரிப்பில் ஆழ்த்தி கவலையை மறக்கச் செய்யும்.

இவ்வாறு மனிதரை மகிழ்வூட்டும் சிரிப்பானது அசட்டுச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, சாகசச் சிரிப்பு, நையாண்டிச் சிரிப்பு, புன் சிரிப்பு, மழலைச் சிரிப்பு, நகைச்சுவைச் சிரிப்பு, தெய்வீகச் சிரிப்பு, புருவச் சிரிப்பு, காதல் சிரிப்பு, வில்லங்கச் சிரிப்பு, ஏழையின் சிரிப்பென பலவகையானது. அந்தந்த இடத்தின் தன்மையினைக் கொண்டு மனிதர்கள் அதன் வகையினை அறிந்துகொள்ள முடியும். சிரிப்பினைக் கொண்டு மனிதர்களைப் பின்வருமாறு பெயரிடலாம்,

**இன்பத்தில் சிரிப்பவன் அதிர்ஷடசாலி**
**துன்பத்தில் சிரிப்பவன் ஞானி**
**கற்பனையில் சிரிப்பவன் கவிஞன்**
**கண்டவுடன் சிரிப்பவன் காரியவாதி**
**தெரிந்து சிரிப்பவன் நடிகன்**
**தெரியாது சிரிப்பவன் ஏமாளி**
**நிலையறிந்து சிரிப்பவன் நிதானமுள்ளவன்**
**நிலையறியாது சிரிப்பவன் நிதானமற்றவன்**
**ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்**
**ஓடவிட்டு சிரிப்பவன் வஞ்சகன்**
**உட்கார்ந்து சிரிப்பவன் சோம்பேறி**
**உழைப்பில் சிரிப்பவன் உயர்ந்த மனிதன்.**

'சிரிப்பு என்பது இதழ்களால் மறைக்கப்பட்ட சொர்க்கம்' என்பர். சிரிப்பு அடுத்தவனையும், உன்னையும் மகிழ்விக்கும் அருமருந்து. மனித இதயத்தைத் திறப்பது எதுவென்றால் அவனுள் அறியாமல் எழுகின்ற சிரிப்புதான். எனவே 'உன் மனம் நோகும்போது சிரி, பிறர் மனம் நோகும்போது சிரிக்கவை'. சார்லி சப்ளின் தன் வாழ்வில் வேதனைகள் நிறைந்திருந்த போதும் தன் நகைச்சுவையால் அனைவரையும் சிரிக்கவைத்தவர். அவர் கூறுகிறார்: 'உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம். ஆனால் உன் சிரிப்பு ஒருவரைக்கூட வேதனைப்படுத்தக்கூடாது' என்று. 'நெருப்பு மட்டுமல்ல, சிரிப்பும் காயப்படுத்தும், காதலித்து பாருங்கள் தெரியும்' என்கிறார் ஒரு கவிஞர். மறுபக்கத்தில் திருவள்ளுவர் தம் குறளோவியத்தில் சிரிக்கத் தெரியாதவர்களுக்கு பகலும் இருள்தான் என்கிறார்.

"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்"
(குறள் 999).

ஏழையின் (மழலையின்) சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்கிறார் அன்னை தெரேசா. 'மலர்ந்த சிரித்த முகம் நம்மை இறைவன் பக்கம் திருப்பும்' என்கிறார் நபிகள் நாயகம். எனவே வாழ்வில் மனதார சிரிப்போம். அடுத்தவரையும் சிரிக்க வைப்போம், அதனால் நாமும் கவலைகளிலிருந்து விடுபட்டு, அடுத்தவர்களும் விடுபட ஒரு கருவியாக மாறுவோம். இறுதியாகத் தமிழ் சினிமாப் பாடலின் கவிவரிகளோடு 'சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' என்று வாழ்த்தி நிற்கின்றேன்.

மற்றுமோர் சிந்தனையுடன் ...

## கேன்சர்

இன்று கேன்சர் மருத்துவமனைகள்ல் கூட்டம் குவிவதற்குக் காரணமே நம் உணவு வழக்கங்களில் ஏற்பட்டுள்ள பெரிய மாற்றம்தான். வேலையை எளிதாக்குவதற்கும் ஆடம்பரத்துக்கும், நாம் கடைகளில் பாக்கெட்டுகளில் அடைத்து வைக்கப்பட்ட உணவுப் பொருட்களை வாங்குகின்றோம். இதைத் தவிருங்கள்.

முக்கியமாக மசலாப் பவுடர்களை வீட்டிலேயே அரைத்துக் கொள்வதாக இருக்கட்டும்
ரீஃபைண்ட் ஒயில், ரீஃபைண்ட் சர்க்கரை, ரீஃபைண்ட் உப்பு போன்றவை வேண்டவே வேண்டாம்.

பூண்டு கேன்சரை வரவிடாமல் தடுப்பதிலும் வந்தவர்களுக்கு அதை விரைந்து குணப்படுத்துவதிலும் முக்கிய பங்குடையது.
தினமும் 4 பூண்டு பற்களை மென்று தின்றால் போதும், பூண்டில் உள்ள அலிஸின் என்ற ஆண்டி ஆக்ஸிடெண்ட் உடலில் தங்கி கேன்சரை உருவாக்கும் ஃப்ரீரேடிகல் என்ற தீங்கான செல்களை வெளியேற்ற உதவும் நியூட்ரிசின்களை உடலில் அதிகரிக்கிறது. உடலை நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாக மாற்றுகிறது. பூண்டை வேகவைத்து சாப்பிடும்போது, அதிலுள்ள "அலிசின்" சிதைவதால், பூண்டை பச்சையாக சாப்பிடுவதே முழுபலன் அளிக்கும்.



# மூன்றாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 பகுதி – I கத்தோலிக்கத் திருமறை நேரம்: 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக :**

**13. பாவத்தினால் இழந்த இறை - மனித உறவை இயேசு எவற்றினால் மீண்டும் நிறுவி சமாதானத்தை ஏற்படுத்தினார்?**

1. தன் சிலுவை மரணத்தினால் 2. உயிர்ப்பினால்
3. விண்ணேற்பினால் 4. பெந்தகோஸ்தே தினத்தினால்

**14. என்னை உமது சமாதானத்தின் கருவியாக்கும் என்ற செபத்திற்குரியவர்:**

1. தூய அந்தோனியார் 2. தூய பவுல்
3. அசிசி நகர் தூய பிரான்சிஸ் 4. தூய யோசேப்வாஸ்

**15. இயேசுவின் போதனைகளின் மையக் கருத்தானது :**

A. பகைவரை அன்பு செய்தல் B. துன்புறுத்துவோருக்காகச் செபிப்பது
C. ஏழைகளுக்கு செபித்தல் D. நோயாளருக்காகச் செபித்தல்

1. A, B 2. B, C 3. C, D 4. A, C

பாடம் : 20

**16. நித்திய வாழ்வை பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?**

A. அயலாரை அன்பு செய்தல் B. இரக்கச் செயல்களில் ஈடுபடல்
C. வறியவர்க்கு உதவல் D. நற்செய்தியைப் போதித்தல்

1. A, B 2. B, C 3. C, D 4. A, B, C

**17. ஆன்மீக உடல் சார்ந்த இரக்கச் செயல்கள் செய்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என இயேசு போதிக்கின்றார்?**

1. நல்லவர்கள் 2. பாக்கியவான்கள்
3. தந்தையின் ஆசி பெற்றவர்கள் 4. ஏழை உள்ளம் படைத்தோர்

**18. ஆன்மீக உடல் சார்ந்த இரக்கச் செயல்களை செய்யாதவர்கள் எப்படிப்பட்டவர்கள் என இயேசு போதிக்கின்றார்?**

1. கெட்டவர்கள் 2. சபிக்கப்பட்டவர்கள் 3. பாவிகள் 4. இரக்கமற்றவர்கள்

**19. பசியுற்றோருக்கு உணவும், ஆடையற்றோருக்கு ஆடையும் வழங்கி, இறந்தவர் சடலங்களை அடக்கம் செய்தும் வந்தவர் :**

1. சாலமோன் 2. எலியா 3. தோபித்து 4. அரிமத்தியா ஊர் யோசேப்

**20. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இறுதித் தீர்ப்புக்கு உள்ளாக்கப்படுவது பற்றிக் கூறும் இறைவார்த்தைப் பகுதி :**

1. மத்தேயு 25 2. மத்தேயு 15 3. மத்தேயு 10 4. மத்தேயு 18

**21. இறையாட்சியை உரிமையாக்கிக்கொள்ள வேண்டுமெனில் :**

A. உடல் சார்ந்த இரக்கச் செயல்களைச் செய்ய வேண்டும்.
B. ஆன்மீக இரக்கச் செயல்களைச் செய்ய வேண்டும்.
C. ஏழைகளுக்கு உதவி புரிதல்

1. A, C 2. B, C 3. A 4. A, B

பாடம் : 21

**22. திருச்சபையின் சட்டங்கள் :**

1. 7 2. 5 3. 4 4. 10

23. இறைமக்களாக வாழ்வதற்கே வழிகாட்டுவது :

A. இறைகட்டளைகள். B. இறைவாக்கு C. திருச்சபைச் சட்டங்கள் D. தியானங்கள்

1. A, B 2. A, C 3. B, C 4. A,D

24. சுத்தபோசனம் என்பது :

1. தரைவாழ் மிருகங்களின் மாமிசத்தை உண்ணாதிருத்தல்
2. கடல்வாழ் உயிரினங்களை உண்ணாதிருத்தல்
3. ஒரு நேரம் மட்டும் உணவு உட்கொள்ளல்
4. சுத்தமாக இருந்து உணவு உட்கொள்ளல்

25. சுத்தபோசனம் உட்கொள்ளும் நாட்களாவன :

1. தனது பாவங்களுக்கு பரிகாரம் செய்தல்
2. தனது மனதைக் கட்டுப்படுத்த பயிற்றுதல்
3. 40 நாட்கள் உண்ணா நோன்பிருந்து இயேசுவைப் பின்பற்றுதல்
4. மேற்கூறிய யாவும்

– விடைகள் 14ம் பக்....




அன்ரனின் நண்பன் தணிகாசலம் தலையில் கை வைத்து யோசித்துக்கொண்டிருந்தார்.

"என்ன தணி யோசின.....?"

"இந்த குண்டு வெடிப்பு பிள்ளைகளையும் மாற்றிப் போட்டுது.... என்ர பேத்திக்கு மூன்று வயது .... அவளுக்கும் ஐ.எஸ் பற்றி விளங்குதுபோல.... அவள் அந்த சொல்ல "ஐஸ்" எண்டுதான் விளங்கிக்கொண்டிருக்கிறாள்.

செய்திகள் பார்க்கிறாள்.... பெரியாக்கள்ட கதைகள் கேட்கிறாள் ....."

"அதுக்கு ஏன் யோசிக்கிறீங்க....?"

"அண்டைக்கு என்ர மனிசி கோவிலுக்குப் போனவ .... கூட பேத்தியையும் கூட்டிக் கொண்டு போனவ .... வெளிக்கிடக்குள்ள, அவளுக்கு கால்வரையும் நீண்ட சட்டையும் போட்டு தலையில தொப்பியும் போட்டுவிட்டவ. அதற்கு என்ர பேத்தி,

"என்ன அம்மம்மா உங்கட வேல .....? என்னையும் பொம்புள "ஐஸ்" எண்டு நினைக்கப்போறாங்க..... குண்டு இருக்கு எண்டெல்லா சொல்லப் போறாங்க .... எனக்கு இந்தச் சட்ட வேணாம் ...."

எண்டு சொல்லிப் போட்டாள்.

"எல்லாம் காலத்தின் கோலம்" என்றார் அன்ரன்.


- பற்றி

■ மற்றவர்களை வெல்ல என்னிடம் அன்பை தவிர வேறொரு ஆயுதம் இல்லை.

■ உடலுழைப்பு செய்யாதவர்கள் சேவை செய்ய முடியாது.

■ வீரம் என்பது உடலைப் பொருத்ததன்று; உள்ளத்தையே பொருத்தது.

■ தியாகம்தான் வாழ்க்கை; அது இயற்கை கற்றுத்தரும் பாடம்.





# நாட்டு வைத்தியர்

இளங்கோ வைத்தியர் மீது என் கோபம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. இந்த பிரம்மதேச வட்டாரத்தில் இவர்தான் படிக்காத மாட்டு வைத்தியர். இவரை விட்டால் நாலு மைல் தாண்டி அந்தியூருக்கு அருகிலிருக்கும் அண்ணாமடு விற்குப் போனால்தான் அசல் டொக்டரைப் பார்க்கமுடியும். நான்கூட அசல் டொக்டர்தான்!

பிரம்மதேசம் ஊரின் முகப்பில் நூறாண்டுகளாகப் பின்னிப் பிணைந்து வியாபித்திருக்கும் வேம்பரசு மரத்தடியில், கிழக்கு நோக்கியவாறு, தந்தமுடைந்த விநாயகர் எதிரிலிருக்கும் சேந்து கிணற்றை பார்த்துக் கொண்டிருப்பார். அவரைச் சுற்றி அமைக்கப்பட்ட நாற்புறத் திண்ணைகளிலும் பிறிதெந்த வேலையுமற்ற வயோதிகர்கள் சதா தாயக்கரம் ஆடிக்கொண்டிருப் பார்கள். ஈரச் சாக் பீஸில் இவர்கள் போட்ட தாயக்கரங்கள் அழியாமல் ஆங்காங்கே இருக்கும். முன்பு ஊர்மக்களின் தாகத்தைத் தீர்த்துக் கொண்டிருந்த சேந்து கிணறு இப்போது உருளைகளை இழந்து உள்புறம் உலர்ந்துவிட்டிருந்தது.

கோயிலுக்குப் பக்கவாட்டில்தான் பாவடி. காடா பாவைத் துவைப்பதற்கு ஏதுவாக நடப்பட்ட ரெட்டைக் கல்தூண்கள், மூன்றடி உயரத்தில் நான்கு வரிசைகளில் கம்பீரமாய் பழமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். விசைத்தறிகள் வரவால் கைத்தறி வழக்கொழிந்து விட்டிருக்க, காற்றில் மெஷின் தறி சப்தம் நிரந்தரமாயணைந்துவிட்டிருந்தது, கைத்தறித் தொழிலாளர்களின் வாழ்க்கையில் இணைந்திருக்கும் வறுமை போல்!

பாவடிக்கு மேற்கிலும் தெற்கிலுமாய் சுமார் 300 வீடுகள். பெரும்பாலானவை கள்ளிக்கோட்டு ஓடு வேய்ந்தவை. சம்பிரதாயத்திற்கு திக்காலுக்கொரு தார்சுக் கட்டிடம். பல ஓட்டு வீடுகள் எப்போதுமே புழக்காட்டமின்றி பூட்டியே கிடக்கும். இந்த வீட்டினரெல்லாம் முன்பணம் பெற்றுக்கொண்டு, அடிமைகளாய் தறி ஓட்ட அயலூருக்குப் போய்விட்டனர். மற்றபடி இந்த ஊரைச் சுற்றியுள்ள கிராமங்களில்தான் விவசாயம் மற்றும் ஆடு, மாடு வளர்ப்பெல்லாம்.

விருதுநகர் மாவட்டத்தில் கால்நடை மருத்துவராய் வேலை பார்த்துக் கொண்டிருந்த நான், இந்த ஊரில் புதிதாய் மாட்டாஸ்பத்திரி திறப்பதைக் கேள்விப்பட்டு, சொந்த மாவட்டத்திற்குள் நுழைந்துவிடலாமென்ற ஆசையில் மாறுதல் வாங்கிக் கொண்டு, மூட்டை முடிச்சுகளோடு வந்து சேர்ந்தேன். வந்த முதல் நாளில் இந்த ஊரை எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. கை ஓடு வேய்ந்த பழைய முன்சீப்பு கட்டிடத்தை தற்காலிகமாக ஆஸ்பத்திரிக்கு ஒதுக்கியிருந்தார்கள். இதில் பொட்டி பொட்டியாய் இரண்டு சின்ன அறைகளும், ஒரு குறுகிய தாழ்வாரமும் இருந்தது. தாழ்வாரத்தில் சொற்ப சிற்ப வேலைப்பாடுகளுடன், நான்கு பனை மரக் கூச்சங்கள் வைத்து இருபுறமும் திண்ணைகள் நீண்டிருந்தன. திண்ணையின் விளிம்பில் கயிற்றுக் கோடுகள் போட்டு அன்றைய நாணயங்கள் பதித்த அடையாளங்கள் இன்றும் உயிரோட்டமாய் இருந்து

கொண்டிருக்கின்றன. இந்த புராதனக் கட்டிடத்தில் கால்நடை மருந்தகம் என்ற போர்டு மட்டும் புத்தம் புதிதாய் மாட்டப்பட்டிருந்தது நீலப் பின்னணியில் வெண்ணிற எழுத்துக்களில்!

பணியேற்று மூன்று தினங்களாகி விட்டிருந்தன. பெரிதாய்க் கால்நடைகள் வந்தபாடில்லை. இரண்டொரு கிழவிமார்கள் வெள்ளாட்டுக் குட்டிக்கு வயிற்றுப் போக்கென்றும், ஏழெட்டுப் பேர் கன்றுக் குட்டிக்கு பேதிமருந்து வேண்டு மென்றும் வந்ததோடு சரி. இதன்பிறகுதான் இளங்கோ வைத்தியரின் விஸ்வரூபம் எனக்குப் புரியத் துவங்கிற்று. இந்த ஏமாற்றுப் பேர்வழியின் முழுமையான பிடியில் இந்த ஊர்மக்கள் சிக்கிக் கிடக்கிறார்களென்று.

"ஏப்பா கனகு... அந்த ஆளுக்கு அப்படியென்ன வைத்தியம் தெரிஞ்சிருக்கப் போவுது?"

கனகு எனப்படும் கனகராஜ் அந்தியூர் ஆஸ்பத்திரியில் பணிபுரிபவர். இப்போதைக்கு எனக்கு தற்காலிக உதவியாளராக நியமிக்கப்பட்டி ருக்கிறார். இந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்பதால், தோட்டந்தொரவுகளுக்குப் போகிற வண்டித்தடங்களும், ஒற்றையடிப் பாதைகளும் இவருக்கு அத்துப்படி!

"அவரு பெரிசா ஒண்ணும் மருந்து, மாத்திரையெல்லாம் குடுப்பதில்லீங்க. வெறும் கடலையெண்ணெய், சாராயம், மிளகாய்ப் பொடி, வெத்தலை, சுக்கு, பெரண்டை, பெருங்காயம், பச்சிலைச்சாறு இவ்வளவுதான். சமயத்தில நாலு சுட்ட கத்தரிக்காயையோ, இல்லீன்னா நாட்டுக்கோழி முட்டைகளையோ மாட்டுக்குக் கொடுக்கச் சொல்லுவார். எந்திரிக்க மாட்டேன்னுச்சுன்னா எருக்கஞ்செடியாலயும், பழைய செருப்பாலயும் மாட்ட செமத்தியா அடிக்கச் சொல்வார். சில சமயத்தில அவரு மந்திரிச்சுக் கொடுக்கற தவுட்டையோ, பருத்திக் கொட்டையையோ மாட்டுக்கு கொடுத்துட்டா அது தீனி எடுத்துடும்னு எல்லாரும் நம்புறாங்க. நானும்கூட பார்த்திருக்கேன்!"

அன்றிரவு எனக்கு தூக்கம் பிடிக்கவில்லை. ஆஸ்பத்திரி திண்ணையில் மடக்குக் கட்டிலில் விரித்துப் படுத்துக்கொண்டேன். இத்தனை படிப்பு படித்துவிட்டு இப்படியொரு படிக்காத முட்டாளோடு போட்டி போடுவது உள்ளூர எனக்கு கேவலமாகப் பட்டது. எப்படியாவது இந்த ஆளை ஒடுக்கியாக வேண்டும், இல்லையேல் நான் படித்ததற்கு அர்த்தமில்லையென்று கூடத் தோன்றியது. மனதிற்குள் ஒரு மகா சவால்! இதற்கு என்ன செய்யலாம்? நாளைக்கே ஊர்த்தலைவரிடம் சொல்லி, சுற்றுப்புறக் கிராமங்களில் புதிய மாட்டாஸ்பத்திரி பற்றி தண்டோரா போடவேண்டும், பிட் நோட்டீஸ் அடித்து விநியோகிக்க வேண்டும், வாரத்திற்கு இரண்டு கிராமங்களுக்குச் சென்று இலவச வைத்தியம் செய்ய வேண்டும். அந்த வைத்தியரையும் ஒரு பாட்டம் மிரட்டி வைக்க வேண்டும்.

குழப்பமான யோசனைகளோடு, குளிருக்கு இதமாகப் போர்த்திக்கொண்டு தூங்கிப் போனேன்.

— தொடரும் .....

மூன்றாம் தவணை எதிர்நோக்கு
முன்னோடிப் பரிட்சை – பகுதி – I
விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 13) 1 | 17) 3 | 21) 4 | 25) 4 |
| 14) 3 | 18) 2 | 22) 2 | |
| 15) 1 | 19) 3 | 23) 2 | |
| 16) 1 | 20) 1 | 24) 1 | |

**1. தீராத விக்கல்**
**ஒரு 30 வினாடிகள் இரு காது துவாரங்களையும் விரல்களால் அடைத்துக்கொள்ளுங்கள் விக்கல் நின்று போகும். அல்லது ஒரே ஒரு சிறு கரண்டி அளவுக்கு சர்க்கரையை வாயில் போட்டு சுவையுங்கள் விக்கல் பறந்து போகும்**

**2. கொட்டாவியை நிறுத்த**
**கொட்டாவி வருவதற்கான காரணம் Oxygen பற்றாக்குறை தான். அதனால் ஒரு நான்கு அல்லது ஐந்து தடவை நன்கு மூச்சை இழுத்து விடுங்கள். கொட்டாவி போய் நன்கு சுறுசுறுப்பாகி விடுவீர்கள்.**



கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்

க.பொ.த உயர்தரம்

- நில்மினி கஜேந்திரன் -

## கல்வித்துறையில் இலங்கைத் திருச்சபையின் பங்களிப்பு:

1798களில் ஆங்கிலேய அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்தியதிலிருந்து கல்வித்துறை ஆனது பல வழிகளிலும், பல இடங்களிலும் பல்வேறு வளர்ச்சியினை அடைந்தது. இக்காலக்கட்டத்தில் மூன்று தரமான பாடசாலைகள் இருந்தன. முதலாவது அரசாங்க பாடசாலைகள். இவை அரசினால் ஆனால் உண்மையில் அங்கிலிக்கன் சபையினரால் நடத்தப்பட்ட சிங்கள, தமிழ், ஆங்கிலப் பாடசாலைகள். இவை மிகத் தரம் குறைந்தனவாகவே இருந்தன. அடுத்து மிஷன் பாடசாலைகள். இவை புரட்டஸ்தாந்து மிஷனரி சபைகளால் நடத்தப்பட்டன. மூன்றாவது தனியார் பாடசாலைகள். இவை சில தனிப்பட்டவர்களால் அல்லது ஒரு மதச் சபையினரால் நடத்தப்பட்டவை. இவற்றைவிட பௌத்த விகாரைகளினால் நடத்தப்பட்ட பன்சில்கள் அல்லது கோயிற் பாடசாலைகளும் இருந்தன. இருப்பினும் அரச பாடசாலைகளுக்கும் புரட்டஸ்தாந்து மிஷன் பாடசாலைகளுக்குமிடையே பெரிய இடைவெளி காணப்பட்டது. இதனால் அரசாங்கம் பாடசாலைகளின் தரத்தினை உயர்த்த நிதியுதவி வழங்குவதெனத் தீர்மானித்தது.

அரச நிர்வாக அமைப்பை சீர்திருத்தும் நோக்குடன் கோள்புறூக் ஆணைக்குழு நாட்டை நன்றாக நிர்வகிக்கவும், ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டுமெனக் கருதியது. மறைபரப்பு நோக்கமின்றி அரச நிர்வாக இயந்திரத்தைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய முறையில் மாணவர்களைத் தயார்படுத்தி கல்வித்துறையை மாற்றியமைத்தது. ஆங்கிலக் கல்வியை ஊக்குவிக்கவும், கல்வித்துறையில் சீர்திருத்தங்களைக் கொணரவும், ஆங்கிலம் நன்கு தெரிந்த ஆசிரியர்களை நியமிக்கவும் அதிகாரம் கொண்ட 'பாடசாலை ஆணைக்குழு' அமைக்கும்படி சிபார்சு செய்யப்பட்டு 1834ல் கொழும்பில் ஒரு பாடசாலை ஆணைக்குழுவும், மாகாணங்களில் பாடசாலை சபைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் அங்கிலிக்கன் பாதிரிமார்களும், அரசாங்க அதிகாரிகளும் மாத்திரமே அங்கம் வகித்தனர். பௌத்த, இந்து, முஸ்லீம், கத்தோலிக்கப் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கவில்லை. இவ்வாணைக்குழுவினால் பல ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் ஒன்றே தற்போதைய றோயல் கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக தனியார் ஆங்கிலம் கற்பிக்கும் மிஷன் பாடசாலைகள் உள்ள கிராமங்களிலிருந்த அரச பாடசாலைகள் மூடப்பட்டன. ஐரோப்பிய அமெரிக்க மறை பரப்புக் குழுக்கள் இன்னும் பல ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பித்தனர். இதனால் பௌத்த, இந்து, இஸ்லாம் கத்தோலிக்கருக்குத் தேவையான ஆங்கில ஆசிரியர்களும், நிதியும் இல்லாததினால் இவர்களால் ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பிக்கமுடியவில்லை. இதனால் அவர்களின் பிள்ளைகள் ஆங்கிலக் கல்வியைப் பெற புரட்டஸ்தாந்து மிஷன் பாடசாலைகளுக்கே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இங்கு பிள்ளைகளுக்குத் தேவையான கல்வி வழங்கப்பட்டதோடு, மறைபரப்பும், மதமாற்றமும் பகிரங்கமாகவே இடம்பெற்றன. இந்தப் பொதுக்கலப்பு பாடசாலைகளில் பல கிறிஸ்தவ மதப் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்கள் அனைவருக்கும் பொதுவாக கிறிஸ்தவ மதம் போதிக்கப்பட்டது. இக்காலத்தில் ஆங்கிலப் பாடசாலைகள், சுதேச மொழிப் பாடசாலைகள், ஆங்கில சுதேச மொழிப் பாடசாலைகள் என 3 வகையான பாடசாலைகள் இருந்தன. ஆங்கிலப் பாடசாலைகளில் சகல பாடங்களும் சிங்களம் அல்லது தமிழில் கற்பிக்கப்பட்டன. ஆங்கில சுதேச மொழிப் பாடசாலையில் ஆங்கிலம் தனி ஒரு பாடமாகவும், ஏனைய பாடங்கள் சுதேச மொழியிலும் கற்பிக்கப்பட்டன.

இப்பாடசாலை ஆணைக்குழு அமைப்பு முறையானது அங்கிலிக்கன் தவிர்ந்த ஏனைய புரட்டஸ்தாந்தினருக்கும், மதத்தினருக்கும் திருப்தியளிக்கவில்லை. இதனால் 1841ல் கவனர் ஸ்டுவர்ட் மக்கென்சியஸ் அகற்றப்பட்டு அனைத்து கிறிஸ்தவ பிரிவினைகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பெரும்பாலும் இல்லத்தவர்களைக் கொண்ட "மத்திய ஆணைக்குழு" ஒன்று அமைக்கப்பட்டது. இதில்

# இல்லற வாழ்வில் ஐம்பது ஆண்டுகள்

(14.06.1969 - 14.06.2019)



## திரு. திருமதி. மரியநாயகம் அன்னமேரி

## தம்பதியினர்

தமது திருமண வாழ்வில் 50வருட
நிறைவை 14.06.2019 அன்று
கெஹேல்வத்த, ஹொப்டனில் தமது
இல்லத்தில் கொண்டாடுகின்றனர்.
இவர்களைப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார்
உறவினர் அனைவரும்
லூர்த்து அன்னை ஆசி பெற்று
நீடுழி வாழ்கவென
வாழ்த்துகிறார்கள்.

ஒரு கத்தோலிக்கக் குரு அல்லது பொது நிலையினருக்கு இடம் கிடைத்தது. இருப்பினும் பௌத்த, இந்து, முஸ்லீம்களுக்கு இடம் கிடைக்கவில்லை. அனைத்து மதத்தைச் சார்ந்த இலங்கைப் பிரஜைகளுக்கும் ஏற்ற கல்வியை அளிப்பதே இக்குழுவின் நோக்கமாகும். இங்கு பிறமதத்தைச் சார்ந்த மாணவர்களைப் புறக்கணிக்கும் அல்லது அவமதிக்கும் புத்தகங்களையோ, போதனைகளையோ, கொள்கைகளையோ தடை செய்வதில் கவனம் செலுத்தினர். மறைக்கல்வி வகுப்புகளுக்குச் செல்லாமலிருக்க ஏனைய மதத்தினருக்கு அனுமதி வழங்கப்பட்டது. காலப்போக்கில் அரசாங்கப் பாடசாலைகளின் நிலை வீழ்ச்சியடைந்தது. ஆனால், மிஷனரி பாடசாலைகள் திறமையாகச் செயற்பட்டு சிறந்த கல்வியினை வழங்கின. இதனால் அரச பாடசாலைகள் மத்திய பாடசாலை ஆணைக் குழுவால் மூடப்பட்டன. சில பாடசாலைகளை அரசாங்கத்தின் பெயரால் நடாத்தும்படி மிஷனரிக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதன் நிமித்தம் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் சில பாடசாலைகளை நடாத்த நிதி வழங்கப்பட்டது. எனினும் கிறிஸ்தவம் அல்லாத மதங்கள் இவ்வாணைக்குழுவில் அங்கம் வகிக்காமையால் கல்வித் துறையில் கிறிஸ்தவ மிஷன்களே ஆதிக்கம் செலுத்தலாயின.

– தொடரும்...




### குறும்பா 34 வரட்சி

தேசமெங்கும் வெய்யிற்கொடுமை வரட்சி
செயற்கைமழை பெய்யவைக்கும் புரட்சி!
ஆசையுடன் பயிர் விதைத்து
அதன் விளைவைக் காண நின்றோர்
வீசுமனற் காற்றாலே விழநெஞ்சிற்றுயர்த் திரட்சி.



# மீண்டும் தழைத்தெழச் செய்வீர்!

தேவனின் உயிர்த்த ஞாயிறு

தீய சாத்தான்கள் கொலைவெறியில் குதித்த ஞாயிறு
வணங்கி அருள்பெற வந்த மானிடர்
பிணங்களாய்க் குவிந்த பெருந்துயர் கண்டோம்
மழலை பேசிடும் பச்சைக் குழந்தைகள்,
இளையவர், பெண்டிர், முதியவர் முதலாய்
குடும்பங்களாகவும் குருதிச் சேற்றில்
குளித்திட வைத்தனர்
மானிட இனத்தில் தவறிப் பிறந்த
மாக்களில் இழிந்தவர்
குண்டு சுமந்து கொண்டு வெடித்தனர் ....
ஐயோ! இந்தக் கொடுமையை உரைக்க
மெய்யாய் எனக்கு மொழிவரவில்லை
மானிடர் துயரம் மாபாதகங்கள்
களைந்திட முன்முடி ஏற்றுக் கசையடிபட்டுச்
சிலுவை சுமந்து உயிர் விடுத்தீரே!
ஏசுவே எங்கள் இனிய நாதரே!
மீண்டும் உயிர்த்தீர் மேதினி காக்கவே
உயிர்த்த நாளில் உதிர்ந்த புனிதரை
உனது அருளால் மீண்டும் பூமியில்
தழைத்தெழ வைப்பீர் என்றுமை வேண்டித்
தாள் பணிகின்றேன்
தண்ணருள் புரிவீர்...!

- அருட்பாவலர் கிளா தமிழ்ந்தாசன் -





# சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

***சாமர்த்தியம் ...***

புகழ்பெற்ற ஓவியர் அரசரின் சித்திரக்கூடத்தில் வரையப்போவதை அறிந்த இளம் ஓவியன் அரசனிடம் வந்தான். "அரசே! புகழ்பெற்ற ஓவியர் வரைவதைப் பார்க்காமலேயே அதற்கு நிகரான ஓவியத்தை வரைகிறேன். அவருக்கு நேரெதிர் இடம்கொடுங்கள். நடுவில் ஒரு திரையிடுங்கள். அவர் வரைவதைப் பார்க்கமாட்டேன்" என்றான். பிரபல ஓவியரின் அற்புதப் படைப்பு முடிவடைந்தது. இளம் ஓவியனின் படைப்பைப் பார்க்க திரை அகன்றது. என்ன ஆச்சரியம்! அச்சு அசலாய் அதே ஓவியம். உண்மையில் இளம் ஓவியன் வரையவில்லை. தன் பக்கத்து சுவரை பளிங்காய்த் தேய்த்து பளபளப்பாக்கியிருந்தான். பிரபல ஓவியரின் படைப்பை இவன் சுவர் பிரதிபலித்தது.

**சித்திரம் ஒரு கலை.**
**சாமர்த்தியம் இன்னொரு கலை.**

***மகிழ்ச்சி மனதில்தான் ...***

அவர்கள் இரட்டைப் பிள்ளைகள். ஒருவன் எதற் கெடுத்தாலும் அழுதுகொண்டிருப்பான். இன்னொருவன் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருப்பான். அழுதுகொண் டேயிருக்கும் குழந்தையைத் திருப்திப்படுத்த அவன் அறையில் அதி நவீன பொம்மைகளை வாங்கி நிறைத்து வைத்தார் அப்பா. பள்ளிவிட்டு வந்ததும் பரவசப்படு வான் என்பது அவர் நினைப்பு. அவனோ அறைக்குள் வந்து பார்த்து அழுது புரண்டான். "எனக்கு இந்த பொம்மைகளைப் பயன்படுத்தத் தெரியாது. உடைத்து விடுவேன், அப்பா அடிப்பார்" என்றழுதான். நொந்து போன அப்பா, எப்போதும் மகிழ்ச்சியாயிருக்கும் பிள்ளை யைப் பரிசோதிக்க அவன் அறையில் குதிரைச் சாணத் தைக் கொட்டிவைத்தார். வந்து பார்த்தவன் மகிழ்ந் தான். "எனக்கு குதிரைக் குட்டிகள் ஞாபகம் வந்து விட்டது. அவை அழகாக இருக்கும். துள்ளிக் குதிக்கும். இன்று கனவில் அவற்றோடு விளையாடுவேன்".

**மகிழ்ச்சி மனதில்தான் இருக்கிறது.**

- ஜெ.பி. இரத்தினராஜா -

**பா**டசாலை அனுமதிக்கான நேர்முகத் தேர்வுக்காக மகன் அபிஷேக்கை தயார் படுத்துகிறார் அப்பா நீலகண்டன்.

"சிங்கப்பூரின் அதிபர் யார்?"

"ஹலிமா யாகோப்"

'வெரிகுட்! நீல் ஆம்ஸ்ட்ராங் எந்த வயதில் நிலாவில் இறங்கினார்?"

"39 வயதில்"



அப்போது வீட்டின் அழைப்புமணி அடிக்கவே அப்பாவும், பிள்ளையும் சென்று கதவைத் திறந்தனர். வெளியே ஒருவர், "ரயில்வேயில் வேலை பார்க்கும் ஏகாம்பரம் வீடு எது?" எனக் கேட்டார்.

ஏழே குடித்தனங்கள் கொண்ட அந்தக் காலனியில், "தெரியலையே" என்று விழித்தனர் தந்தையும் மகனும்.

## கூண்டுக்கிளிகள்

## வினா விடைப் போட்டி - இல 13

### சரியான விடைகள்

1. டால்பின்
2. 10 இலட்சம் மதிப்புள்ள "பெண்ட்லே" கார்
3. மாவீரன் அலெக்சாண்டர்
4. 1 கொரிந்தியர் 3:16
5. அகேனதனின்
6. 1. குழந்தைகளும், பைத்தியக்காரர்களும்
   2. இன்னும் பிறக்காதவர்களும், ஏலவே இறந்துவிட்டவர்களும்
7. இசை, ஓவியம், விளையாட்டு மற்றும் பிற கலைகள்
8. நாம் வான்வெளியில் காணக்கூடிய விண்மீன்களை விட 500 மடங்கு அதிகமான பிளாஸ்டிக் துகள்கள் நம் கடல்களில் கலந்துள்ளன என்பதால் இவை கடல் வாழ் உயிரினங்களை அழிக்கும் முதல் எதிரிகள் என்பதாலும்.
9. பலரது மனங்களில் மலராக மலர்ந்தது
   சிலரது மனதை சுட்டெரித்தது
   சிலரது மனதில் முள்ளாகக் குத்தி ஊடுருவியது
10. தேனீக்கள் மூலம் நடைபெறும் மகரந்த சேர்க்கையால் தான் நமக்கு தாவரங்கள் மூலம் உணவு கிடைக்கிறது. எனவே தேனீக்கள் இல்லையென்றால் மகரந்த சேர்க்கையும் இல்லை உணவும் இல்லை.

**சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:**

- சன்ஷலி ஜெயக்குமார்,
  53/22, சித்திவிநாயகர் குறுக்கு வீதி,
  புன்னைச்சோலை,
  மட்டக்களப்பு.

- L.D. பிறேமலோஜினி,
  இல. 72/7, 3ம் குறுக்குத் தெரு,
  மட்டக்களப்பு.

- M. சில்வெஸ்ரர்,
  525/8, திருமலை வீதி,
  மட்டக்களப்பு.

பாடசாலைகளிற் கற்றுப் பெறுவது மட்டுமல்ல அறிவு; வாசிகசாலைகளில் குவிந்து கிடக்கும் நூல்களின் ஊடாகப் பெறுவதே பரந்த அறிவாகும். வாசிப்பதற்கு நேரத்தை ஒதுக்கு: நீதான் அறிவாளி. நல்ல நூல்களை விலைகொடுத்து வாங்குவது அறிவிற்கான முதலீடே ஆகும். நூல்கள் என்பன அறிஞர்கள், மேதைகள், விட்டுச்சென்ற அறிவுப் பொக்கிஷங்களே. வாசிப்பதால் அறியாமை அகலும், அறிவு ஆட்சி செய்யும். இதனால் கற்றோர் உன்னை அறிவரசனாக மதிப்பார்கள். அறிவில்லாதவன் வெறும் குடம், அறிவுள்ளவனோ நிறைகுடம்.

ஐந்தறிவுள்ள ஜீவராசிகளுக்கும் கூட அபார மான அறிவுண்டு. ஏன்? எதற்கு? எப்படி? எப்போது? எங்கே? போன்ற வினாக்களை அடிக்கடி கேட்பதால் அறிவு மேலோங்கும். தன்னை யார் என்று படிக்காதவன், எதைப் படித்தும் பயனில்லை. ஓட்டைப் பாத்திரத்தில் ஊற்றிய நீரைப் போலத்தான் இருக்கும்.

தேடிக்கற்பவன் மேதையாகிறான். கற்றவ னுக்கு "கஞ்சி" கூட கற்கண்டாய் இனிக்கும். வெற்றிக்கு முதல் வழி விழிப்புணர்வு. நமது இலக்கு எதுவென இனங்கண்டு அதை நோக்கி விடாமுயற்சியுடன் செல்வோர் நிச்சயமாக சாதிப்பார்கள். தோல்வியே வெற்றி யின் முதற்படி. எனவே தோல்விமேல் ஏறி அஞ்சாது நடந்து செல் வெற்றி நிச்சயம். மனந்தான் எல்லாவற்றிற்கும் மூல காரணம். மனம் எதை நினைக்கிறதோ அதையே மூளை செயற்படுத்துகிறது. நீ எதை நினைக்கிறாயோ அதையே மூளை நிறை வேற்றுகிறது. "முடியாது" என்றால் மூளை அதை நிறைவேற்றுகிறது. "முடியும்" என்றால் அதை நிறைவேற்றுகிறது.

உனக்குள் மாபெரும் சக்தி மறைந்துள்ளது. அதை வெளியே கொண்டு வா, நீதான் சமூகத்தில் உயர்ந்தவன். முடியாது, தெரியாது, இயலாது, அது கஸ்டம் என்ற சொற்களை மறந்து விடு; வெற்றி நிச்சயம். உலக சாதனையாளர்களின் சரித்திரங்களடங்கிய ஏராளமான நூல்கள் நூலகங்களில் காணப்படுகின்றன. அவற்றைச் சென்று வாசித்தால் முன்னேறும் வழிகளை நீயும் அறிந்து கொள்வாய்.

உலக சாதனையாளர்களிடம் முதல் (பணம்) இல்லை. வறுமை இருந்தது; துன்பம் இருந்தது; தனிமை இருந்தது. ஆனாலும் துணிவுடன் அயராது உழைத்துப் போராடி, எத்த னையோ உபகரணங்களைக் கண்டுபிடித்துத் தந்துள்ளார்கள். இவர்கள் இல்லாவிட்டால் இன்றும் நாம் மாட்டுவண்டிலிற்தான் பயணம்



செய்துகொண்டிருப்போம். தொடர்ச்சியான முயற்சியே ஒருவனைச் சாதனையாளனாக்கும். அலட்சியம், சோம்பல், இயலாமை என்ற புல்லுருவிகள் உனது முன்னேற்றத்தை முடக்கிவிடும்.

முதலில் நான் ஏழை, கையாளாகாதவன் என்ற எண்ணங்களைக் கைவிடுங்கள். மனமெனும் குதிரைக்கு கடிவாளம் போடாதவன் அதன் போக்கிலேயே சென்று அதள பாதாளத்திலேயே விழுந்து மடிவான். எனவே, உனக்கு அரசன் நீதான்.

நீ எவ்வளவு பெறுமதிமிக்கவன் என்பதை எடை போட்டுப் பார். உன் கண்கள் இரண்டின் பெறுமதி என்ன? உன் கிட்னி ஒன்றின் பெறுமதி என்ன? இதயத்தின் பெறுமதி என்ன? இவ்வாறு உன் உடல் பாகங்களின் பெறுமதிகளைப் பார்த்தால் கோடி ரூபாவிற்கு மேல் வருமல்லவா? ஏன் நீ உன்னைக் குறைத்து எடைபோடுகிறாய்?

இனியாவது நீ யார்? உனது பெறுமதி என்ன? என்று உணர்ந்து கொண்டு எழுந்து நில். துணிந்து செல். தோல்வி கிடையாது. ஏழையாகப் பிறப்பது பாவமில்லை. ஏழையாக இருப்பதுதான் பாவம்.

சுயநலம் மிகவும் நல்லதே. ஆனால் அதை விரிவுபடுத்துங்கள். உதாரணத்திற்கு, ஒரு ஒலிம்பிக் போட்டியில் நீங்களும் உங்கள் ஆருயிர் நண்பரும் ஓடுகிறீர்கள். நீங்கள் முதல் நிலையிலும், நண்பன் இரண்டாம் நிலையிலும் ஓடும்போது "பிறசினேகம்" என்று கூறி நண்பனுக்கு விட்டுக்கொடுத்தால் உங்களைப் போல் முட்டாள் யாருண்டு? எனவே, ஆழமாகச் சிந்தியுங்கள். வாய்ப்பை நழுவ விடாதீர்கள். போட்டி இருந்தால்தான் உயர்ச்சியும் இருக்கும்.

நீ உயர குடும்பம் உயரும்
குடும்பம் உயர சமூகம் உயரும்
சமூகம் உயர ஊர் உயரும்
ஊர் உயர தேசம் உயரும்
சுயநலமே உயர்ச்சியின் உந்துகோள்.

ஒருவன் சுயநலம் கொண்டால், அவன் உழைப்பால், கல்வியால், முயற்சியால் சாதனை படைப்பான். எல்லோரையும் நம்புவது தவறு. அதேபோல் எவரையும் நம்பாதிருப்பதும் தவறுதான். தேவை என்று வரும்போது சிங்கம் கூடச் சிறு நரியாக மாறிவிடும்.

**உங்கள் மன அழுத்தம் எதற்காக?**

நண்பர்களின் இம்சையா? பொறாமையா? கிண்டலா? கேலியா? சவாலா? தோல்வியா? முதலில் என்ன காரணம் என்று இனங் காணுங்கள். இவைதான் உங்களை மென்மேலும் உரமூட்டி ஊக்குவிக்கும் உந்துகோள்கள். இவைகளை வரவேற்று அதன்மேல் சுலபமாக ஏறிச் செல்லுங்கள். வெற்றி நிச்சயம்.

சமுத்திரத்தில் மிதந்தாலும் மூடப்பட்ட போத்தல் நீரைச் சுவைக்காது. அதேபோன்று மூடிய உள்ளம் உடையோர்க்கு எந்த வெற்றியும் கிடைக்காது.

துயரக்கடலில் மூழ்கியவன் "வெற்றி" என்ற முத்துடன் வெளியே வருவான். முயற்சி திருவினையாக்கும். ■

## தெரிந்துகொள்வோம்...

- மிகப் பெரிய பூ பூக்கும் தாவரம் - *ராப்லேசியா*
- பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைப் போன்று இரண்டு மடங்கு நீளமாக இருக்கும்.
- 100 சதவீதம் மறுசுழற்சி செய்யப்படும் பொருள் - *கண்ணாடி*
- வாசனைப் பொருட்களின் ராணி எனப்படுவது - *ஏலக்காய்*
- வீரத்தைப் பாடிய 400 சங்க இலக்கியப் பாடல்களின் தொகுப்பு - *புறநானூறு*
- யானையின் துதிக்கையில் சுமார் 40 ஆயிரம் தசைகள் உள்ளன.
- நமது மூளை ஏறக்குறைய 60 இலட்சம் செல்களால் ஆனது.
- இசைக்கருவிகளில் ஒன்றான வீணையில் 7 தந்திக் கம்பிகள் உள்ளன.
- எறும்பின் ஆயுட்காலம் - *10 ஆண்டுகள்*

## வில்லிபாரதம்

# இலக்கிய மஞ்சரி





**ஆழியோன்**

வேத வியாசகர் அவர்கள் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் சுலோகங்கள் கொண்டதாக மகா பாரதத்தை வட மொழியில் எழுதினார். இதன் சாரத்தை வில்லிபுத்தூர் ஆழ்வார் வில்லிபாரதம் எனத் தேனினும் இனிய செந்தமிழில் செய்யுட் காவியமாக இயற்றினார்.

மக்களின் உள்ளங் கவரும் பல கதைகளும், கர்மம், யோகம், ஞானம் ஆகிய வேதாந்த இல்லற நுட்பங்களும், சகோதர வாஞ்சையும், தாயாதி பகையும், அரசியல் நுட்பங்களும், அரச பண்புகளும், குடியோம்பலும், அறவாழ்வும், வீடு பேற்றிற்குரிய வழியும் இக் காவியத்தில் கூறப்பட்டுள்ளதாக வ.த. இராமசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இதன் காவியத் தலைவன் அருச்சுனன் ஆவான். இவன் உட்பட 109 பாத்திரங்கள் இக் காவியத்தில் உள்ளார்கள்.

வில்லிப்புத்தூர் ஆழ்வார் திருமுனைப் பாடி நாட்டில் சனியூரில் வீர ராகவாச்சாரியார் என்பவருக்கு மைந்தராய்ப் பிறந்தார் என்று வரலாறு சொல்கின்றது. இவர் சமயத்தால் வைணவர்; எனினும் சைவத்தின்மீது வெறுப் பற்றவர்.

வக்கபாகை என்னும் நகரத்தில் அரசாண்ட "கொங்கர் குல வரபதியாட்கொண்டான்" என்ற குறுநில மன்னன் வேண்டிக்கொண்டதற்கிணங்க இவ்வாறு பாரதத்தை இயற்றினார் என்று குறிப்பிடப்படு கின்றது. இந்நூலுக்கு இவரது குமாரர் "வரந்தருவார்" என்பவர் 23 பாடல்கள் கொண்ட சிறப்புபாயிரம் ஒன்றைப் பாடியுள்ளார்.

வில்லிப்புத்தூரார் கி.பி. 14 ஆம் நூற் றாண்டில் வாழ்ந்தவர். இவர் பிற புலவர்களின் பாடல்களில் குற்றம் கண்டு கடிந்து திருத்தும் சுபாவம் கொண்டவர். இதனால் அவரை,

"குறும்பி அளவாக் காதைக் குடைந்து
தோண்டி எட்டினமட்டு அறுப்பதற்கோ
வில்லியில்லை" என்னும் தொடரால் அழைப் பார்கள்.அத்துடன் அருணகிரி நாதரோடு இவர் வாதம் செய்து தோல்வியுற்றவர் என்பார்கள்; வேறு சிலர் அதை மறுப்பர்.

கௌரவர்களின் எண்ணிக்கை நூறு என்பது தான் நாம் அறிந்த வரலாறு. ஆனால் இவர் கட்கு ஒரேயொரு சகோதரியும் உண்டு என்பது சிலருக்குத்தான் தெரியும். அவளின் பெயர் துச்சளை.

விவிலியத்திலும் சுவையான சம்பவங்கள் உள்ளன. நீதித்தலைவர்கள் 14:14ல் சிம்சோன் ஒரு விடுகதை கேட்பார். "உண்பவனிடமிருந்து உணவு வெளிவந்தது; வலியவனிடமிருந்து இனியது வந்தது" இதற்கு விடை சொன்னால் 30 நார் பட்டாடைகளைத் தருவதாக சிம்சோன் வாக்களிக்கின்றார்; ஏழு நாட்கள் கால அவகாசம் கொடுக்கின்றார். இவர் விடுகதையைச் சொன்ன முப்பது இளைஞர்களும் முறையற்ற விதத்தில் விடைகளைக் கண்டுபிடித்துவிட்டு ஏளனமாக சிம்சோனிடம் பின்வருமாறு சொல்கின்றார்கள்,

"தேனினும் இனியது எது?
சிங்கத்தினும் வலியது எது?"

வாசிக்க வாசிக்க சுவை ததும்பும் விடயங் கள் இங்கு உண்டு. வாசிப்பதால் சுவையும் உண்டு; ஆசீர்வாதமும் உண்டு. ■




# தொண்டன்

50வது ஆண்டு நிறைவு

1969 - 2019

## வெல்வது யார்...?

### கவிதைப் போட்டி

**தலைப்புகள்:**

1. "இன்னுமா செபமாலை ..."
2. "அழகான விண்மீனே - மரியே"

**விதி முறைகள்**

1. தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்படல் வேண்டும்.
2. வித்தியாசமான சிந்தனைகள் வரவேற்கத்தக்கன.
3. முதல் மூன்று தரமான கவிதைகள் பரிசுக்குத் தெரிவாகும்.
4. பரிசினைப் பெற்ற கவிதைகள் தொண்டனில் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.
5. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
**15.07.2019**

**அனுப்பவேண்டிய முகவரி:**



**ஆசிரியர் - தொண்டன்**
**50வது ஆண்டு நிறைவுக்**
**கட்டுரைப் போட்டி**
**அ.பெ.இல. 44,**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**மட்டக்களப்பு.**

**கவியரசர்**

**கண்ணதாசன் ஒருமுறை லொயோலா கல்லூரியின் தமிழ் மன்றத்தில் உரையாற்றச் சென்றிருந்தார். விழா துவங்குமுன்பாக, மாணவர்கள், கவியரசருக்கு தங்கள் கல்லூரி உணவு விடுதியில் சிற்றுண்டி வழங்கினார்கள்.**

**சூடாக இருந்த இட்லியைக் கவியரசர் விரும்பிச் சுவைத்தார். மாணவர்களில் ஒருவர்,**

**“ஐயா நீங்கள் எதைப் பற்றியும் கவிதை எழுதுவீர்கள் இல்லையா?” என்று கேட்கவும், கவியரசர், “ஆமாம்” என்று பதில் சொன்னார்.**

**உடனே, அந்த மாணவர், “எங்கள் விடுதி இட்லியைப் பற்றி இரண்டு வரிகளில் கவிதை சொல்லுங்கள் ஐயா!” என்றார்.**

**சட்டென்று அடுத்த நொடியே கவியரசர் இப்படிச் சொன்னார்:**

**“இட்டிலியே ஏன் இளைத்துவிட்டாய்? - எவனை இங்கே நீ காதலித்தாய்?”**

**அதுதான் கவியரசர்!**

*“பெரிதோ சிறிதோ எதிலும் குற்றம் செய்யாதே; நண்பனாவதற்கு மாறாகப் பகைவனாகாதே. கெட்ட பெயர் இழுக்கையும் பழிச்சொல்லையும் வருவிக்கும் இரட்டை நாக்குக்கொண்ட பாவிகளுக்கு இவை நேரும்”*



சீராக் 5:15



# இறைவன் கொடுத்தது...

எலி ஒன்று, வைர வியாபாரி வீட்டிலிருந்த ஒரு வைரத்தை விழுங்கிவிட்டது. மிகவும் விலை உயர்ந்த வைரம் அது.

வியாபாரி, எலி பிடிப்பவனைப் பார்த்து, எப்படியாவது அந்த எலியைச் சுட்டு வயிற்றில் இருக்கும் வைரத்தை எடுக்க உதவ வேண்டுமென கேட்டுக்கொண்டான்.

எலி பிடிப்பவனும் தன் துப்பாக்கியுடன் வந்துவிட்டான், எலியைச் சுட்டு வைரத்தை எடுப்பதற்கு. எலியோ அங்கே இங்கேயென்று போக்குக் காட்டி ஓடியதில் திடீரென்று நூற்றுக் கணக்கான சக எலிகள் ஒன்று கூடிவிட்டன. ஆனால், அந்த நூற்றுக் கணக்கான எலிகளுக்கிடையேயும் அந்த வைரம் விழுங்கிய எலி மட்டும் அந்த எலிக்கூட்டத்தோடு சேராமல் ஒதுங்கி தனித்தே நின்றிருந்தது .

எலி பிடிப்பவனுக்கோ அது வசதியாகப் போய்விட்டது. சரியாகக் குறி பார்த்து, அந்த எலியை சுட்டான். எலி அந்த இடத்திலேயே இறந்துவிட்டது.

வைர வியாபாரி சந்தோஷமாக அந்த எலியின் வயிற்றைக் கிழித்து வைரத்தை எடுத்துக்கொண்டான். ஆனால் ஒரு கேள்வியை எலி பிடிப்பவனைப் பார்த்து வைர வியாபாரி கேட்டான்.

“ஆமாம்... அந்த எலி மாத்திரம் மற்ற எலிகளோடு சேராமல் தனித்தே இருந்ததே..! நீயும் அதைச் சரியாக அடையாளம் கண்டு சுட்டுவிட்டாயே..! அது எப்படி...?”

அந்த எலி பிடிப்பவன் பதில் சொன்னான்..


“இப்படித்தான்... பலபேர் திடீர்ப் பணக்காரர்கள் ஆனதும், மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர் என்ற எண்ணம் கொண்டு மற்றவர்களுடன் தன்னைச் சேர்க்காமல், தூரத்தில் வைத்துக் கொள்வார்கள். அதுவே ஆபத்தில் அவர்களுக்கு உதவாமல் போய்விடுகிறது.

உறவுகளும் அப்படித் தான். சிலர் இடையில் வந்து அழிந்து போகும் செல்வத்தை நம்பி இறைவன் கொடுத்த உறவுகளை அசட்டை செய்துவிட்டு ஒதுங்கி விடுகிறார்கள்.

ஆயிரம் கோடி செல்வம் இருந்தாலும் சொந்த பந்தமும், நல்ல நட்புமே கடைசி வரையில் நம்முடன் இருக்கும்... ■



''பிறர் உனக்கு செய்த உதவியை எப்போதும் நினைத்திருப்பாயாக!''





# எப்படித் தூக்கம் வரும்?

பைந்தமிழ்க்குமரன் டேவிட்

கூரையில் மின்விசிறி
கொதி போக்க ஏசி குளிர்
கட்டிலுடன் பஞ்சு மெத்தை
சுற்றிவர நுளம்பு வலை
தூக்கம் மட்டும் வருவதாயில்லை

தாலாட்டுகள் ஓய்ந்து தசாப்தங்களாயிற்றே
தொடராகக் கேட்கும் துப்பாக்கி வேட்டுக்கள்
அது இராணுவம்
ஒத்தையொத்தையாய் கேட்குமது இயக்கம்
காதைப்பிளக்கும் ஒலி ஆட்டிலறி
ஏவலும் வெடித்தலுமாய் இரட்டையொலி
செஷல்
படபடக்கும் திடுதிடுக்கும் ஹெலி
நிலமதிர பீப்பாயுருட்டும் அவ்ரோ
உறுமிவரும் ஒலியோ கவச வாகனம்
இவைகள் ஓய்ந்துபோன தாலாட்டுக்கள்.

அப்போவெல்லாம்
தொடராக நாய்கள் குரைக்கும்
இராணுவம் வரும்
விட்டுவிட்டு நாய்கள் குரைக்கும்
இயக்கம் வரும்
ஊர் எல்லையில் நாய்கள் குரைக்கும்
ரவுண்டப் நடக்கும்
அனுங்கலாகி முச்சிழுத்துக் குரைக்கும்
பேய்கள் வரும்
ஊளையிட்டுக் குளறும்
பிணங்கள் வீழும்
அந்த நாய்களும் இரவுகளும்
இப்போது இல்லை.

தாலாட்டுகள் ஓய்ந்தபின்னே
எப்படித்தான் தூக்கம் வரும்.

- தனக்குத் தெரிந்ததை 'தெரியும்' என்றும், தெரியாததை 'தெரியாது' என்றும் அறிவதுதான் அறிவு. - கன்ஃபூஷியஸ்
- என்ன உதவி அளித்தாலும் பாம்பின் குணம் போகவே போகாது. அது தன் விஷத்தைக் கக்கியே தீரும். பாம்பைப் போலவே சில மனிதர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நம்பவே கூடாது. - ஈசாப்
- கடவுள் நம்மிடம் வற்புறுத்திக் கேட்பது மிக மிகத் தூய்மையான தியானமேயாகும். - மகாத்மா காந்தி
- எதிர்காலத்தைப் பற்றி பயப்படாதே; இறந்த காலத்தை பற்றி அழாதே; நிகழ்காலத்தில் ஒழுக்கத்துடன் இரு.

- சான்றோர் மொழி



# திருஅவைச் செய்திகள்

## அப்பா என அழைக்கும் துணிவு


**கி**றிஸ்தவ செபம் என்பது, இறைவனை, "அப்பா" என அழைப்பதற்குத் துணிச்சலைத் தருவதுடன் துவங்குகிறது என்பதை இயேசு வெளிப்படுத்தியுள்ளார். இயேசு, தாமே பயன்படுத்திய செபத்தில் வெளிப்படுத்திய வார்த்தைகளில் எல்லாம் **"விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே"** என்ற பதத்தை நம் நினைவுக்குக் கொணர்வதைப் பார்க்கிறோம். சீடர்களின் இதயங்களில் தன் மூச்சுக் காற்றை விடுபவர் தூய ஆவியார் என்பதே ஒவ்வொரு செபத்தின் முதன்மைக் கூறாக இருக்கிறது என்பதை, புதிய ஏற்பாடு முழுவதும் நாம் தெளிவாகக் காண்கிறோம். இறையருளினால் நாமனைவரும் அன்பு குறித்த மூவொரு கடவுளின் உரையாடல் நோக்கி கவரப்படுகிறோம் என்பதே கிறிஸ்தவ செபத்தின் மறையுண்மையாகும். சிலுவையில் இயேசு, **"என் கடவுளே, என் கடவுளே"** எனக் கூக்குரலிட்டதில், தந்தைக்கும் அவருக்குமிடையே உள்ள உறவின் உறுதிப்பாடு தெரிகிறது. இது, நம் நம்பிக்கை மற்றும் செபத்தின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது. "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்" என்ற இயேசுவின் செபத்தை, இந்த மறைக்கல்வி உரையின் இறுதியில் நாம் மீண்டும் எடுத்துரைப்போம்" என மறைக்கல்வி உரையை நிறைவு செய்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## இயேசு வழங்கும் அமைதி, ஆழ்கடல் அமைதி போன்றது ....

**உ**லகிலிருந்து கிடைக்கும் போலியான அமைதி அல்லது வங்கியில் பணத்தை வைத்திருப்பதால் கிடைக்கும் அமைதியை விரும்பாமல், இயேசுவால் உறுதி கூறப்பட்ட அமைதியில் வாழ கடவுளை மன்றாடுவோம். இயேசு வழங்கும் அமைதியை உலகால் தர இயலாது, அது தூய ஆவியாரிடமிருந்து வருவது. அந்த அமைதி, வாழ்வில் சோதனை வேளைகளில் நிலைத்திருந்து, புன்னகையோடு முன்னோக்கிச் செல்வதற்கு, நம் இதயங்களில் துணிச்சலையும் தருகின்றது.

## தீவிர நோய்களோடு வாழ்ந்துகொண்டிருப்போருக்காக செபிப்போம்.

**"தீ**விர நோய்களோடு வாழ்ந்துகொண்டிருப்போருக்காகச் செபிப்போம். இறைவனின் கொடையான வாழ்வை அதன் துவக்கத்திலிருந்து இயற்கையான முடிவுவரை, பாதுகாப்போம். தூக்கியெறியும் கலாச்சாரத்திற்கு நம்மை உட்படுத்தாதிருப்போம்" என விண்ணப்பிக்கிறது திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி.



இறைவார்த்தைக்குச் செவிமடுப்பது, திருஅருளடையாளங்கள், சகோதரத்துவ வாழ்வு, மற்றவர்களுக்கு சேவையாற்றுதல் ஆகியவைகள் வழியாக ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருப்போம்" என விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் : திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அண்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 15

1) உலகமே வியந்து பொறாமைப்படும் அப்பிள் நிறுவனத்தின் அதிபர் யார்?

........................................................................................................

2) மக்கள் மத்தியில் கிறிஸ்தவர்கள் செய்த சமூகப் பணிகளுக்கு "கத்தோலிக்க இயக்கம்" எனப் பெயர் சூட்டிய அமைப்பு எது?

........................................................................................................

3) மாதுளம் பூவினால் உண்டாகும் நன்மைகள் யாவை? ........................................

........................................................................................................

4) தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு மரித்த மறைசாட்சியாளர் யார்?

........................................................................................................

5) "ஒரு சிறந்த அறிஞனின் முழு வாழ்க்கையின் பயனை ஒரு நூல் நமக்கு வேண்டும் போது தரக்காத்துக்கொண்டிருக்கின்றது" எனக் கூறியவர்:

........................................................................................................

6) 'The World's Best' விருதினைப் பெற்று உலகின் கவனத்தை ஈர்த்த சிறுவன் யார்? இப்போட்டியினை ஒழுங்குசெய்த அமைப்பு எது? ........................................

........................................................................................................

........................................................................................................

7) உலகெங்கும் மறை பணியாளர்களை அனுப்பி போற்றுதற்குரிய பணிகளால் புகழின் உச்சிக்கு சென்ற நாடு எது? ........................................

8) திருத்தந்தை 8ம் பத்திநாதரின் "வணக்க மாதம்" பற்றிய கூற்று யாது?

........................................................................................................

........................................................................................................

9) காய்கறிகளை நறுக்கியபின் கழுவுதல் சிறந்ததல்ல. இதற்கான காரணம் யாது?

........................................................................................................

........................................................................................................

10) தென்னிந்தியாவில் துப்பாக்கிச்சூட்டு மரணங்கள் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் எதற்கெதிராக நடைபெற்றது?

........................................................................................................

பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

பங்கு / தொ.பே.இல : ........................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ........................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 15**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 30.06.2019



திருவிவிலியம் கற்போம் 192

1 சாமுவேல் 23:5-29, 24:11-22

பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் தேதி 30.08.2019

**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. பின்பு தாவீதும் அவர்தம் வீரர்களும் கெயிலாவுக்குச் சென்று பெலிஸ்தியரோடு போரிட்டனர். அவர் அவர்களுக்குப் ........................ உண்டாக்கி, அவர்களின் கால்நடைகளை ஓட்டிச் சென்றார். இவ்வாறு தாவீது கெயிலாவாழ் மக்களை விடுவித்தார்.

   அ) பேரிழிவை ஆ) பேரிழப்பை இ) பேரழிவை

2. "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரே என் பொருட்டு சவுல் கெயிலாவுக்கு வந்து, அந்நகரை அழிக்கத் திட்டமிட்டுள்ளதை உம் அடியான் நான் ........................ கேள்விப்பட்டேன். கெயிலாவின் குடிமக்கள் என்னை அவரிடம் ஒப்புவிப்பார்களா?"

   அ) பன்முறை ஆ) பலதடவை இ) பலமுறை

3. சவுல் தம்மைக் கொலைசெய்யத் தேடுகிறார் என்று அறிந்த தாவீது மிகுந்த அச்சம் கொண்டார்: ஆதலால் ........................ உள்ள சீபு பாலை நிலத்தில் தங்கியிருந்தார்.

   அ) கர்மேயில் ஆ) சீதோனில் இ) ஓர்சாவில்

4. "நீங்கள் என்மீது இரக்கம் காட்டியதால் ஆண்டவரின் ........................ பெறுவீர்களாக! நீங்கள் போய் அவன் நடமாடுகிற இடம் எதுவென்றும் யார் அவனை அங்கு பார்த்தவன் என்றும் இன்னும் நன்றாக ஆய்ந்து அறியுங்கள்.

   அ) ஆசியை ஆ) இறைவரங்களை இ) இறையருளை

5. அதனால் சவுல் தாவீதை தொடர்வதைக் கைவிட்டு பெலஸ்தியரை எதிர்க்கத் திரும்பிச் சென்றார். ஆதலின் அவ்விடம் ........................ என்று அழைக்கப்பட்டது. தாவீது அங்கிருந்து புறப்பட்டு ஏன்கேதிலுள்ள பாதுகாப்பான இடத்தில் தங்கினார்.

   அ) பிளவுப்பாறை ஆ) பிரிக்கும் பாறை இ) இணைப்பின் பாறை

6. அவர் சென்றபோது ........................ ஆட்டுப்பட்டிகளைக் கண்டார். அதனருகில் ஒரு குகையிருந்தது. இயற்கைக்கடன் கழிப்பதற்கு சவுல் அதனுள் சென்றார். அப்பொழுது தாவீதும் அவர்தம் ஆள்களும் அக்குகையின் உட்பகுதியில் இருந்தனர்.

   அ) தெருவோரத்தில் ஆ) வீதியோரத்தில் இ) வழியோரத்தில்

7. அதன்பின் தாவீதும் எழுந்து குகையிலிருந்து வெளியேறிச் சவுலைப் பின் தொடர்ந்து "அரசே என் தலைவரே" என்று அழைத்தார். சவுல் பின்புறம் திரும்பியபோது தாவீது தரையில் ........................ வீழ்ந்து வணங்கினார்.

   அ) முகம்குப்புற ஆ) நெடுச்சாணாக இ) தெண்டனாக

8. என்பொருட்டு ஆண்டவரே உமக்கு நீதி வழங்கட்டும்: ஆனால் உமக்கெதிராக என் கை எழாது. முன்னோரின் ........................ தீயோரிடமிருந்தே தீமை பிறக்கும். ஆதலால் உம்மேல் நான் கை வைக்கமாட்டேன்.

   அ) சொற்களுக்கேற்ப ஆ) வாய்மொழிக்கேற்ப இ) வார்த்தைகளுக்கேற்பக

9. "இது உன் குரல்தானா?" என்று சொல்லி உரத்த குரலில் அழுதார். அவர் தாவீதிடம் "நீ என்னிலும் ........................ ' நீ எனக்கு நன்மை செய்தாய்: ஆனால் நானோ உனக்கு தீங்கு செய்தேன்.

   அ) பெரியவன் ஆ) உயர்ந்தவன் இ) நீதிமான்

10. "ஆண்டவர் மேல் எனக்கு ஆணையிட்டுக் கூறு" என்றார். அவ்வாறே தாவீதும் சவுலுக்கு ஆணையிட்டுக் கூறினார். பின்னர் சவுல் வீடு திரும்ப தாவீதும் அவர் தம் ஆள்களும் ........................ இடம் நோக்கிச் சென்றனர்.

   அ) பாதுகாப்பான ஆ) மறைவான இ) தங்கும்

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

# அறிவை வளர்ப்போம் - 191

பரிசுப் போட்டி



(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
**30.06.2019**

1. இந்தியாவைப் போன்று ஓகஸ்ட் மாதம் 15ம் திகதியைத் தனது சுதந்திர தினமாகக் கொண்டாடும் நாடு:
   (தென்கொரியா - சுவீடன் - ஜெர்மனி)
2. மஹாபாரதத்தில் அர்ச்சுனனின் ஆலோசகராக இருந்தவர் யார்?
   (கர்ணன் - விஷ்ணுபகவான் - விபீஷணன்)
3. கூடைப்பந்தாட்டத்தில் ஒரு அணியில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை :
   (12 வீரர்கள் - 7 வீரர்கள் - 5 வீரர்கள்)
4. மிகப்பெரிய முட்டைகளை இடும் கடல் பிராணி :
   (திமிங்கிலம் - சுறா - கடல்குதிரை)
5. “நெருப்புப் பந்தலிலே ........................... பதுமை ஆடுமா?”
   (பஞ்சுப் - வைக்கோல்ப் - மெழுகுப்)
6. “திரிதல் புணர்ச்சிக்கு” உதாரணம்:
   (மரங்கள் - பாடல் பாடினான் - கத்தரிக்காய்)

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

தபாலகம் / தொ.பே.இல:
..........................................................

பரிசு அனுப்பவேண்டிய பங்கு:
..........................................................

அனுப்பவேண்டிய முகவரி:
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 191
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.




திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் : 190,
பங்கு பற்றியோர் 20 பேர், ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 8 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 190 விடைகள்

கொல்ல, வாழும் ஆண்டவர் மேல், விழ்த்தினார், பலகணி, கடவுளின் ஆவி, ஒருக்காலும், ஆண்டுப்பலி, சாதகமாய், ஏசேல், இருக்கையில்

## அறிவை வளர்ப்போம் - 190 விடைகள்

1. 12
2. பூமியில் இரண்டு வாரம்
3. அவுஸ்திரேலியா
4. மதுரை
5. நண்டு
6. உவமைத்தொகை

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 1ம் பிரிவில் 300/= பரிசு பெறுபவர்:

* S. மார்க் ரொனி,
  C/O, திரு. சகாயம்,
  கோட்டகொட,
  ஸ்பிரிங்வெலி,
  பதுளை.
* க. ரூத் எவலீன்
  இல. 127/45 F,
  அம்ரோஸ் வீதி,
  கருவேப்பங்கேணி.
* L. மேரி ஸ்டெலா,
  இல. 30, கிளாக்கர் வீதி,
  கல்லடி.
* D. அக்ஷிதா டேனிஷா,
  26/15, 3ம் குறுக்கு,
  இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 142 முடிவுகள்

**1ம் பரிசு : 400/=**

* J. மெலனி,
  135, லேடி மெனிங் டிறைவ்,
  மட்டக்களப்பு.

**2ம் பரிசு : 300/=**

* ஜெயக்குமார் பவிலோஜ்,
  16/26, குடா வீதி,
  சின்ன உப்போடை,
  மட்டக்களப்பு.

**3ம் பரிசு : 200/=**

* J. ஷான் ஜொகுர்த்தன்,
  167A, சூசையப்பர்புரம்,
  சொறிக்கல்முனை - 01.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ : ர்)

# நினைவஞ்சலி!

கடவுளோடே கடவுளாய் வாழும் எங்கள்
அப்பா அம்மாவின் நினைவுகள்



**அமரர். சூசைப்பிள்ளை பங்கிராஸ்**

பிறப்பு : 1943.11.04
இறப்பு : 2008.05.25

11ம் வருட நினைவு

**அமரர். றோசரி பங்கிராஸ்**

பிறப்பு : 1955.07.02
இறப்பு : 2011.05.30

08ம் வருட நினைவு

கடந்து செல்வதனால் தான்
அதற்கு காலம் என்று பெயர்.
காலத்தைக் கடப்பதுதான் வாழ்க்கை,
இல்லை இல்லை காலத்தை இரசிப்பதுதான் வாழ்க்கை.
அதை இரசித்து கடப்பதுதான் வாழ்க்கை.
கடந்து சென்று முடிந்த வாழ்க்கையை
திரும்பிப் பார்ப்பதுதான் முடிவில்லாத
வாழ்க்கையின் முதற்படி.

இன்று முடிவில்லாத வாழ்வில் 11 வருடங்களை
அப்பாவும், 8 வருடங்களை அம்மாவும் பொற்காலமாக
இரசித்து நிற்கும் இத்தருணம் நீங்கள் விட்டுச் சென்ற
தடங்களை நினைத்து நாங்கள் உங்கள் நினைவில்
வாழ்கின்றோம் ....
எம் பழைய கரைந்து போகாத நினைவுகளுடன் ....

"நிலவுகள் சேர்ந்து
பூமியில் வாழ்ந்ததே
அது ஒரு பொற்காலம் ....."

நினைவுகளில் வாழ்ந்தாலும்
நிதம் கனவில் நீங்கள்
வந்து வந்துதானே போகிறீர்கள்....

**அன்புப் பிள்ளைகள்**
அருட்தந்தை ரமேஷ்,
பிராசாத்